Adda247 தமிழ்

ஜூலை மாத பதிப்பு

# வெற்றி ADDA247 தமிழ்நாடு மாதாந்திர நடப்பு நிகழ்வுகள் தமிழில் 2022 PDF

TNPSC Group 1, TNPSC Group 2/2A, TNPSC Group 3 & 4, TNUSRB, TNFUSRC, IBPS, SSC, IBPS RRB, SBI, RRB மேலும் பல

மாநிலங்களவை நியமன எம்.பி. க்களாக இளையராஜா, பி.டி. உஷா தேர்வு

வடக்கு பட்டு பகுதியில் பழங்கால கட்டிட சுவர் பயன்பாட்டு பொருட்கள் கண்டெடுப்பு:

மாணவர்களுக்கு உளவியல் ஆலோசனை வழங்கும் திட்டம் முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்:

44 - வது செஸ் ஒலிம்பியாட் தொடங்கியதாக பிரதமர் அறிவித்தார்

தமிழ் நாட்டில் முதன் முறையாக யூதர்களின் சூத பள்ளியைக் குறிக்கும் கல்வெட்டு கண்டெடுப்பு:



- adda 247 app ல் தமிழ்நாடு மாநில தேர்வு
- பிரிவில் பயின்றிருங்கள்
- கிளிக் செய்க
- தேர்ந்திடு வென்றிடு

**ஐஜிஎஸ்எஸ் வென்ச்சர்ஸ் பிரைவேட் நிறுவனத்துடன் செமி கண்டக்டர் உயர் தொழில் நுட்ப பூங்கா அமைக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் - முதல்வர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்து:**

- முதல்வர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் தலைமை செயலகத்தில், சிங்கப்பூரை தலைமையிடமாக கொண்ட ஐஜிஎஸ்எஸ் வென்ச்சர்ஸ் பிரைவேட் லிமிடெட், தமிழ் நாட்டில் 300 ஏக்கர் பரப்பளவில் ஒரு செமி கண்டக்டர் உயர் தொழில் நுட்ப பூங்காவை அமைப்பதற்காக, தமிழ் நாடு அரசின் வழிகாட்டி நிறுவனம் மற்றும் ஐஜிஎஸ்எஸ் வென்ச்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.




- இந்நிறுவனம், அடுத்த 5 ஆண்டுகளில், இத்திட்டத்தில் 25,600 கோடி ரூபாய் முதலீடு செய்திடவும், 1500 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பு அளிக்கவும் திட்டமிட்டுள்ளது.
- சர்க்யூட் வடிவமைப்பாளர்கள், உற்பத்திப் பொருள் விநியோகஸ்தர்கள், உபகரண விநியோகஸ்தர்கள் மற்றும் செமி கண்டக்டர் அவுட் சோர்சிங் மற்றும் பரிசோதனை நிறுவனங்கள் ஆகிய திட்டங்கள் இந்த பூங்காவில் அமைக்கப்படும்.
- இதன் காரணமாக உருவாகக் கூடிய சூழல் அமைப்புகளின் மூலம் 25,000 பேருக்கு கூடுதல் வேலை வாய்ப்புகள் கிடைத்திடும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- ஐஜிஎஸ்எஸ்வி நிறுவனம், ப்ராஜெக்ட் சூரியா என்ற பெயரில் செமி கண்டக்டர் புனையமைப்பு திட்டத்தினை நிறுவ திட்டமிட்டுள்ளது.
- இதற்காக, இந்தியாவில் செமி கண்டக்டர் புனையமைப்பு திட்டங்களை அமைப்பதற்கான ஒன்றிய அரசின் 'இந்தியா செமிகண்டக்டர் மிஷன்' திட்டத்தின் கீழ் விண்ணப்பம் அளித்துள்ளது.

**தேசிய போலீஸ் அகாடமியின் இயக்குனராக தமிழகத்தை சேர்ந்த அதிகாரி ராஜன் நியமனம்:**

- ஐதராபாத்தில் உள்ள சர்தார் வல்லபாய் படேல் தேசிய போலீஸ் அகாடமியின் இயக்குனராக ஐபிஎஸ் அதிகாரியும், உளவுத் துறையின் சிறப்பு இயக்குனருமான ஏ. எஸ். ராஜன் என்ற சேர்ம ராஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.
- தேனி மாவட்டத்தை சேர்ந்தவர் ஏ. எஸ். ராஜன். இவர், பீகார் கேடர் ஐபிஎஸ் அதிகாரியாவார்.
- இருபது ஆண்டுகள் மத்திய உளவு பிரிவில் பணியாற்றினார். பீகாரில் 12 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றிய ராஜன் 1999 ல் உளவுப் பிரிவில் சேர்ந்தார்.
- மத்திய உளவுத் துறையில் டெல்லி, தமிழ் நாடு, குஜராத், லடாக் மற்றும் உத்தர பிரதேசம் போன்ற இடங்களில் பணியாற்றினார்.
- லண்டனில் உள்ள இந்திய தூதகரத்தில் மூன்றாண்டு காலம் பணியாற்றியுள்ளார்.

**தமிழகத்தில் உள்ள அணைகளை பாதுகாக்க மாநில அணை பாதுகாப்பு அமைப்பு - தமிழக அரசு:**

- தமிழகத்தில் உள்ள அணைகளை பாதுகாக்க மாநில அணை பாதுகாப்பு அமைப்பை தமிழக அரசு உருவாக்கியுள்ளது. மத்திய அரசின் அணை பாதுகாப்பு சட்டத்தின் கீழ் மாநில அணை பாதுகாப்பு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்த அமைப்பில், சென்னை, கோவை, மதுரை, திருச்சி உள்ளிட்ட மண்டலங்களின் தலைமைப் பொறியாளர்கள் உட்பட 15 பேர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த மைப்பு, அணையின் பாதுகாப்பு, நீர் வருகை, நீர் வெளியேற்றம் உள்ளிட்டவைகளை கண்காணிக்கும்.
- மத்திய அரசின் அணை பாதுகாப்பு சட்டம் 2021 இன் கீழ் மாநில அணை பாதுகாப்பு அமைப்பை தமிழ் நாடு அரசு ஏற்படுத்தி அறிவிப்பு வெளியிட்டுள்ளது.
- மாநிலத்தில் உள்ள அணைகளைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தமிழ் நாடு அரசு விளக்கமளித்துள்ளது.
- அந்தக் குழுவின் அலுவல் சாரா தலைவராக நீர் வளத் துறையின் தலைமைப் பொறியாளர் (பொது) இருப்பார்.
- மாநில அணை பாதுகாப்பு அமைப்பின் கண்காணிப்பு பொறியாளர் அதன் உறுப்பினர் செயலாளராக செயல்படுவார். அவர்களுடன் பல்வேறு மண்டலங்களின் தலைமைப் பொறியாளர் உள்பட 13 பேர் உறுப்பினர்களாக பணியாற்றுவார்கள்.

- இதில் கேரளா, புதுச்சேரி அரசுப் பொறியாளர்களும் இடம் பெற்றுள்ளனர். அது போல, தமிழக நீர் வளத் துறையின் தலைமைப் பொறியாளர், கண்காணிப்புப் பொறியாளர் உள்ளிட்ட 11 பொறியாளர்களைக் கொண்ட மாநில அணை பாதுகாப்பு அமைப்பையும் உருவாக்கி அரசு உத்தரவிட்டுள்ளது.
- அணை பாதுகாப்பு சட்டத்தின் படி அணை பாதுகாப்பு அமைப்பை மாநில அளவில் ஏற்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டிருந்த நிலையில் தமிழ் நாடு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.
- அணை பாதுகாப்பு சட்டம் 2021, இந்தியாவில் உள்ள குறிப்பிட்ட அணைகளை முறையான கண்காணிப்பு, ஆய்வு, பராமரிப்பு செய்வதன் மூலம் பேரழிவு ஏற்படுத்தும் அச்சுறுத்தல்களை அமைப்பு ரீதியாக தடுப்பதற்கான நடைமுறையை வழங்குகிறது.




**முதல்வர் தொடங்கி வைத்த டிஜிட்டல் எக்ஸ்ரே வாகனம்:**

- சென்னை, நொச்சிக் குப்பத்தில், 'காச நோய் இல்லா தமிழ்நாடு - 2025' என்ற இலக்கை அடைய அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக 23 மாவட்டங்களுக்கு ரூ.10.65 கோடி மதிப்பீட்டில் டிஜிட்டல் எக்ஸ்ரே கருவி பொருத்திய 23 நடமாடும் வாகனங்களை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.
- 2025 - ஆம் ஆண்டிற்குள் காச நோய் இல்லா தமிழகம் என்ற இலக்கை அடைய தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, காச நோய் உள்ள இடங்களில் வசிப்பவர்களிடம் காச நோய் உள்ளதா என்பதை கண்டறிய, முதல் கட்டமாக 14 நடமாடும் எக்ஸ்ரே வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- தற்போது இரண்டாம் கட்டமாக 23 மாவட்டங்களுக்கு தலா 46 லட்சம் ரூபாய் வீதம், 10 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் டிஜிட்டல் எக்ஸ்ரே கருவியுடன் கூடிய 23 நடமாடும் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

- இவ்வாகனம் ஏழை எளிய மக்களைத் தேடிச் சென்று காச நோய் ஏற்பட வாய்ப்புள்ள இடங்களான நெரிசலான குடியிருப்புப் பகுதிகள், முதியோர் இல்லங்கள், தொழிற்சாலைகள் மற்றும் காச நோய் ஏற்படும் அபாயம் உள்ள பகுதிகளில், காச நோய் கண்டறிவதற்கு பயன்படுத்தப்படும்.
- காச நோய் உள்ளவர்களை கண்டறிய, அவர்களுக்கு சளி பரிசோதனை மற்றும் எக்ஸ்ரே போன்றவற்றை இலவசமாக மேற்கொண்டு காச நோய் உள்ளதா என்பது கண்டறியப்படும்.
- காச நோயாளிகளுக்கு உரிய சிகிச்சைகள், மருந்துகள், 500 ரூபாய் உதவித் தொகை மற்றும் தொடர் கண்காணிப்பு சேவை வழங்கப்படுவதோடு, அங்குள்ள மக்களிடையே காச நோய் பற்றிய விழிப்புணர்வு மற்றும் நோய் தடுப்பு முறைகள் குறித்தும் தெரிவிக்கப்படும்.
- நடமாடும் வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள நவீன டிஜிட்டல் எக்ஸ்ரே கருவி மின் வசதி இல்லாத இடங்களில் கூட ஜெனரேட்டர் உதவியுடன் இயங்க வசதி செய்யப்பட்டுள்ளது.
- இவ்வாகனத்தின் உட்பகுதி குளிர் சாதன வசதியுடன் கூடிய எக்ஸ்ரே அறை மற்றும் எடுக்கப்படும் எக்ஸ்ரேக்களை உடன் சரிபார்க்கும் வகையில் கணினி பொருத்தப்பட்ட அறை என இரண்டு அறைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.
- மேலும், மக்களுக்கு விழிப்புணர்வு மற்றும் நோய் தடுப்பு முறைகளை தெரிவிப்பதற்கு வண்ண தொலைக்காட்சி திரையும், முகாம்களின் போது மக்கள் வசதிக்காக நிழற்குடையும் இவ்வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ளது.
- ஒரு மணி நேரத்தில் 10 எக்ஸ்ரே எடுக்கும் திறன் உள்ள இவ்வாகனங்களின் மூலம் நடப்பாண்டில் 5 லட்சம் நபர்களுக்கு காச நோய் கண்டறிய திட்டமிடப்பட்டுள்ளது.
- காச நோயாளிகள் குணமடைய சிகிச்சை காலத்தில் சரியான உணவு மற்றும் ஊட்டச்சத்து அவசியம். காச நோய் நோயாளிகளுக்கு கூடுதல் ஊட்டச் சத்து கிடைக்கும் வகையில் ஊட்டச் சத்து பெட்டகத்தில் தானியம், தினை மற்றும் பருப்பு வகைகள் ஆகியவை தன்னார்வலர்களால் வழங்கப்படுகிறது.

Adda247 தமிழ்

- காச நோயாளிகள் முழுமையாக குணமடைய அவர்களுக்கு தகுந்த ஊட்டச் சத்து உள்ள பொருட்களை வழங்கி, உறு துணையாக இருந்த 100 தன்னார்வலர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களை பாராட்டும் விதமாக தமிழக முதல்வர், 10 தன்னார்வலர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கியதோடு மூன்று காச நோயாளிகளுக்கு ஊட்டச் சத்து பெட்டகத்தையும் வழங்கினார்.
- காச நோய் இல்லா தமிழகம் - 2025 என்னும் இலக்கின் படி, 2015 - ம் ஆண்டில் ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு 217 காச நோயளிகள் என்று இருந்த விகிதத்தை 2025 - ஆம் ஆண்டுக்குள் 44 காச நோயாளிகளாக குறைக்க வேண்டும்.
- சிறப்பாக செயல்பட்டு, காச நோய் விகிதத்தை 40 விழுக்காடு குறைத்ததற்காக நீலகிரி மாவட்டத்திற்கும், 20 விழுக்காடு குறைத்ததற்காக திருவண்ணாமலை, கரூர், கன்னியாகுமரி, நாகப்பட்டினம், நாமக்கல், சிவகங்கை மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களின் காச நோய் துணை இயக்குநர்கள், என மொத்தம் 8 காச நோய் துணை இயக்குநர்களுக்கு தமிழக முதல்வர் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

**மாநில அணைகள் பாதுகாப்பு குழு / அமைப்பின் செயல்பாடுகள்:**

- அணை பாதுகாப்புக்கான மாநில குழு ஒவ்வொரு 3 வருடங்களுக்கும் மறு சீரமைக்கப்பட வேண்டும். இந்த குழு ஆண்டுக்கு 2 முறை கூடி, பருவ மழை தொடங்கும் முன் ஒரு கூட்டம் நடத்தப்படும்.
- இக்கூட்டம் 6 மாதங்களுக்கு ஒரு முறையாக நடக்கிறது. பருவ மழை தொடங்கும் முன் அணைகளை முறையாக இயக்குவதற்கான (ஹைட்ரோ மெக்கானிக்கல்) பணிகளை ஆய்வு செய்ய வேண்டும்.
- அணைகளை முதலில் நிரப்புவதற்கு முன், மாநில அணை பாதுகாப்பு அமைப்பு குறிப்பிட்ட அணையை பொறியாளர்கள் மூலமாகவோ அல்லது நிபுணர் குழு மூலமாகவோ ஆய்வு செய்து, ஆரம்ப கட்டத்திலேயே ஆய்வு செய்து அதன் விரிவான அறிக்கையை தயாரிக்க வேண்டும்.
- அணையை நிரம்புவதற்கு தகுதியை முறையாக சான்றளிக்க வேண்டும். அணையின் கண்காணிப்பு, நீர் வானிலை நிலையங்கள், நில அதிர்வு நிலையங்களின் கருவிகளை கண்காணிக்க வேண்டும்.

- அணைகளின் மறு சீரமைப்பு, பழைய அணைகளின் மறு சீரமைப்பு தேவைகள் குறித்த பரிந்துரைகளை செய்கிறது. ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக பராமரிக்கப்படும் அணையை தேர்ந்தெடுப்பதற்கான கூட்டத்தை நடத்த வேண்டும்.
- அணைகளின் பாதுகாப்பு குறித்த அறிவுறுத்தல்களை மாநில அணைகள் பாதுகாப்பு குழு வழங்க வேண்டும். மேலும், அணையில் ஏதேனும் பெரிய பிரச்னைகள் அல்லது இடர்பாடுகள் காணப்பட்டால், தலைமை பொறியாளர் மற்றும் கண்காணிப்பு பொறியாளர், மாநில அணை பாதுகாப்பு அமைப்பு முதல் கட்ட குழுவுடன் இணைந்து அணையை ஆய்வு செய்து, பிரச்னைகளை தீர்க்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- ஒவ்வொரு மாநில அணை பாதுகாப்பு அமைப்பும், 3 மாதங்களுக்கு ஒரு முறை, அதன் செயல்பாடுகள் மற்றும் மாநிலத்தில் உள்ள குறிப்பிட்ட அணைகளின் பாதுகாப்பு குறித்த ஆண்டறிக்கையை தயாரித்து, அத்தகைய அறிக்கையை தேசிய அணை பாதுகாப்பு ஆணையம் மற்றும் மாநில அரசுக்கு அனுப்பப்படும்.
- தேசிய அணை பாதுகாப்பு ஆணையம் மற்றும் சம்பந்தப்பட்ட மாநில அணை பாதுகாப்பு அமைப்பு, குறிப்பிட்ட அணைகள் கட்டமைப்புகள் பாதிக்கப்பட்டதாக கண்டறியப்பட்டால், அவற்றை சரி செய்ய நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கும்.
- மாநில அணை பாதுகாப்பு அமைப்பின் கண்காணிப்பு பொறியாளர் தலைமையிலான 5 பேர் கொண்ட குழுவால் தமிழகத்தில் உள்ள 128 அணைகளிலும் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.
- அப்போது, அணையின் கட்டமைப்பு, அணை அடித்தளம், அணையின் மேல் நிலை நீர் நிலைகள் மற்றும் அணையின் கீழ் பகுதியில் உள்ள நிலத்தின் தன்மை அல்லது பயன்பாடு குறித்து பொறியாளர்களால் தொகுக்கப்பட்டு இறுதி செய்யப்படுகிறது.



**அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் 'டி என் டாக்' என்ற பெயரில் அறிஞர், வல்லுநர்கள் உரை நிகழ்த்த ரூ.37.50 லட்சம் அரசாணை வெளியீடு:**

- 2022 - 2023 ம் ஆண்டுக்கான சட்டப் பேரவை கூட்டத்தில், பள்ளிக் கல்வித் துறையின் மானிய கோரிக்கையின் போது, வெளியிடப்பட்ட அறிவிப்பில், அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் ஒருங்கிணைப்பில் சர்வதேச அளவில் பல் துறை நிபுணர்கள், அறிவியல் ஆய்வாளர்கள், புகழ் பெற்ற அறிஞர்களின் உரைகள் மிக சிறந்த தொழில் நுட்பம், மற்றும் அரங்க அமைப்புடன் 'TN talk' என்ற பெயரில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.
- இதையடுத்து, டி என் டாக் என்ற நிகழ்வு ஒவ்வொரு ஆண்டும் 25 நிகழ்ச்சிகள் நடத்தப்படும். தனித்துவம் மிக்க இந்த நிகழ்வில் மிக சிறந்த பேச்சாளர்கள், துறை சார்ந்த வல்லுநர்கள் மூலம் நடத்தப்படும்.
- இலக்கியம், பொருளாதாரம், கல்வி, தொல்லியல், மருத்துவம், அறிவியல் போன்ற ஒவ்வொரு துறை சார்ந்த புகழ் பெற்ற மிக சிறந்த ஆளுமைகள் அழைக்கப்பட்டு பேசுவார்கள்.
- புகழ் பெற்ற பல்கலை கழகங்கள், கல்லூரிகள், அரசு நிறுவனங்களுடன் இணைந்து நடத்தப்படும். இந்த நிகழ்வுகள் பொது நூலகத் துறையின் இயக்குநர் தலைமையில் ஒருங்கிணைப்பு குழு அமைக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.
- இந்த நிகழ்வு ஒன்றுக்கு தலா ரூ.1 லட்த்து 50 ஆயிரம் என்ற வகையில் 25 நிகழ்வுகளுக்கு ரூ.37 லட்சத்து 50 ஆயிரம் செலவாகும் என்றும் அதை செலவினத்துக்கான தொகையை ஒதுக்கீடு செய்ய வேண்டும் பொது நூலகத் துறை இயக்குநரின் கருத்துருவை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதை ஏற்று, ரூ. 37 லட்சத்து 50 ஆயிரத்தை நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்குகிறது.

**35 - வது ஆண்டு விழா வட அமெரிக்க தமிழ்ச் சங்கப் பேரவை:**

- அமெரிக்கா, கனடாவில் உள்ள 70 - க்கும் மேற்பட்ட தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பாக விளங்கும் வட அமெரிக்க தமிழ்ச் சங்கப் பேரவையின் ('ஃபெட்னா') 35 - வது ஆண்டு விழா நேற்று நடைபெற்றது.
- இதில், 2020 - ம் ஆண்டுக்கான உலகத் தமிழ் பீட விருது, இலக்கியச் செம்மல் தமிழ்கோ இளங்குமரனாருக்கும், 2021 - ம் ஆண்டுக்கான விருது, ஈரோடு தமிழன்பனுக்கும் வழங்கப்பட்டது. இதில் காணொலி வாயிலாக முதல்வர் ஸ்டாலின் கலந்து கொண்டார்.

**முதலீட்டாளர்களின் முதல் முகவரி - தமிழ் நாடு என்ற முதலீட்டாளர்கள் மாநாடு:**

- தமிழக அரசின் தொழில் துறை சார்பில் 'முதலீட்டாளர்களின் முதல் முகவரி - 'தமிழ் நாடு' என்ற முதலீட்டாளர்கள் மாநாடு சென்னை தாஜ் கோரா மண்டல் நடந்தது. முதல்வர் மு.க. ஸ்டாலின் கலந்து கொண்டு மாநாட்டை தொடங்கி வைத்தார்.
- இதில், தமிழ் நாடு உயிர் அறிவியல் கொள்கை 2022, தமிழ் நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை ஆகியவற்றை முதல்வர் மு.க. ஸ்டாலின் நடந்த நிகழ்ச்சியில், வெளியிட்டார்.
- மேலும், மாநிலத்தில் நிதித் தொழில் நுட்பங்கள் பரவலாக பின்பற்றப்படுவதை அதிகரிக்கும் வகையில், டிஎன்டெக்ஸ்பீரியன்ஸ் திட்டத்தையும் முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.
- மேலும், டிஎன்டெக்ஸ்பரியன்ஸ் திட்டத்திற்கான இணைய தளத்தையும் முதல்வர் மு.க. ஸ்டாலின் துவக்கி வைத்தார்.
- நிகழ்ச்சியில், தமிழ் நாடு நிதி தொழில் நுட்ப முதலீட்டு கள விழா - தமிழ் நாட்டில் உள்ள புத்தொழில்களுக்கு ஒரு தளத்தை உருவாக்கும் வகையிலும், தமிழ் நாட்டில் உள்ள புத்தொழில் சூழலை தொழில் மூல தன நிறுவனங்கள் மற்றும் புது முதலீட்டாளர்களுக்கு அறியப்படுத்தும் வகையில் ஒரு நிதி நுட்ப முதலீட்டு கள விழா, முதல்வரால் தொடங்கி வைக்கப்பட்டது.
- வழிகாட்டி நிறுவனமும், startup TN நிறுவனமும் இணைந்து இத்திட்டத்தினை மேற்கொள்கின்றன. இந்த நிகழ்விற்கான விவரங்களை அறிந்து கொள்ளலாம்.
- மாநாட்டில், 11 நிதி தொழில் நுட்ப நிறுவனங்களுடன் நிறுவன புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதல்வர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தானது.
- நிதி தொழில் நுட்பக் கொள்கையின் கீழ் ஊக்குவிப்பு சலுகை வழங்குவதற்கு நிதி நுட்ப ஆட்சி மன்றக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட 2 நிறுவனங்களுக்கு ஊக்கத் தொகுப்பு சலுகை அளிப்பதற்கான ஆணைகளையும் முதல்வர் நிறுவனங்களுக்கு வழங்கினார்.
- 65,373 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 58,478 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கிடும் வகையில் 53 திட்டங்களுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதல்வர் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன.

Adda247 தமிழ்

- 59,871 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 16,420 பேருக்கு வேலை வாய்ப்பு என்ற வகையில் சிறப்பு தொகுப்புச் சலுகை அளிக்கப்படும் 7 திட்டங்களுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதல்வர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன.
- மொத்தம் 1,25,244 கோடி ரூபாய் முதலீட்டில் 74,898 பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கிடும் 60 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதல்வர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தானது.
- மேலும் முதல்வர் மு.க. ஸ்டாலின், 22,252 கோடி ரூபாய் முதலீட்டில், 17,654 பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் 21 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.
- அதே போல 1,497 கோடி ரூபாய் முதலீட்டில் 7,050 பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் 12 திட்டங்களின் வணிக உற்பத்தியினையும் அவர் தொடங்கி வைத்தார்.
- 2021 - 22 ம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட உரையில் அறிவித்தவாறு, உயிர் அறிவியல் துறையில் தமிழ் நாட்டின் பங்கினை மேலும் வலுப்படுத்தும் வகையில், தமிழ் நாடு உயிர் அறிவியல் மேம்பாட்டுக் கொள்கை 2022 - ஐ வெளியிட்டார்.
- 2021 -22 ம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட உரையில் அறிவித்தவாறு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையில் தமிழ் நாட்டின் பங்கினை மேலும் வலுப்படுத்தும் வகையில், தமிழ் நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை 2022 - ஐ முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டார்.

**புதிய தொழில் நிறுவனங்களுக்கான (ஸ்டார்ட் - அப்) முன்னெடுப்புகளில் தமிழ்நாடு முதலிடம்:**

- புதிய தொழில் நிறுவனங்களுக்கான (ஸ்டார்ட் - அப்) முன்னெடுப்புகளில் தெளிவான பார்வை மற்றும் இலக்குகளைக் கொண்டுள்ள மாநிலங்களின் பட்டியலில் தமிழ் நாடு முதலிடத்திலுள்ளதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள ஸ்டார்ட் - அப்களுக்கான உகந்த சூழலை வழங்கும் மாநிலங்களின் தர வரிசை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த பட்டியலில் 2,3,4 மற்றும் 5 ஆம் இடங்களை முறையே பஞ்சாப் உத்தரகண்ட், உத்தர பிரதேசம் மற்றும் அந்தமான் நிகோபார் மாநிலங்கள் பெற்றுள்ளன.

- இது தவிர ஸ்டார்ட் - அப் முன்னெடுப்புகளை உருவாக்குதல், ஸ்டார்ட் அப்களுக்கு ஆதரவான முன்னெடுப்புகளை கண்டறிந்து முறைப்படுத்துதல், ஸ்டார்ட் அப்களுக்கான சூழலில் சிறந்த முன்னேற்றம், ஸ்டார்ட் - அப்களுக்கான மிகச் சிறந்த முன்னெடுப்புகள் மற்றும் புதுமையான நடவடிக்கைகள் என்ற இதர பிரிவுகளில் பின்வரும் மாநிலங்கள் முன்னணியில் உள்ளன.
- ஸ்டார்ட் - அப் முன்னெடுப்புகளை உருவாக்குதல்:
- ஸ்டார்ட் - அப் முன்னெடுப்புகளை ஆந்திரம், பிகார், மிசோரம், லடாக்
- ஸ்டார்ட் - அப்களுக்கு ஆதரவான முன்னெடுப்புகளை கண்டறிந்து முறைப்படுத்துதல் - புதுச்சேரி, தில்லி, சத்தீஸ்கர், சண்டீகர் மற்றும் ராஜஸ்தான்
- ஸ்டார்ட் அப்களுக்கான சூழலில் சிறந்த முன்னேற்றம் - கேரளம், மகாராஷ்டிரம், ஒடிஸா, தெலங்கானா மற்றும் ஜம்மு - காஷ்மீர்
- ஸ்டார்ட் அப்களுக்கான மிகச் சிறந்த முன்னெடுப்புகள் மற்றும் புதுமையான நடவடிக்கைகள் - கர்நாடகம், குஜராத்

**உணவு பாதுகாப்பு - ஒடிசா முதலிடம், தமிழகத்துக்கு 9 - வது இடம்:**

- தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தை செயல்படுத்துவதில் சிறந்து விளங்கும் மாநிலங்களை ஆண்டு தோறும் மத்திய அரசு வரிசைப்படுத்தி வருகிறது.
- 2022 - ம் ஆண்டுக்கான மாநில தர வரிசை குறியீட்டை மத்திய உணவு மற்றும் நுகர்வோர் விவகாரத் துறை அமைச்சர் பியுஷ் கோயல் வெளியிட்டார்.
- தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய மாநிலங்களின் வரிசையில், ஒடிசா முதலிடம் பெறுகிறது.
- உத்தர பிரதேசம் இரண்டாம் இடத்திலும், ஆந்திரா மூன்றாம் இடத்திலும் உள்ளன. இந்த தர வரிசை குறீயீட்டு பட்டியலில் தமிழகத்துக்கு ஒன்பதாவது இடம் கிடைத்துள்ளது.



**மாநிலங்களவை நியமன எம்.பி. க்களாக இளையராஜா, பி.டி. உஷா தேர்வு:**

- கலை, இலக்கியம், அறிவியல், விளையாட்டு போன்ற துறைகளில் சிறந்து விளங்குபவர்கள் மாநிலங்களவை நியமன உறுப்பினராக நியமிக்கப்படுகிறார்கள்.
- அந்த வகையில் இசையமைப்பாளர் இளையராஜா, முன்னாள் தடகள வீராங்கனை பி.டி. உஷா, தெலுங்கு திரைப்படத் தயாரிப்பாளர் விஜயேந்திர பிரசாத், கொடையாளரும், கர்நாடக மாநிலத்தில் உள்ள தர்மஸ்தலா கோயில் நிர்வாகியுமான வீரேந்திர ஹெக்டே உள்ளிட்டோரை நியமன எம்.பி. க்களாக நியமித்து மத்திய அரசு அறிவித்தது.

**உயிரி தொழில் நுட்ப கல்வி ஒப்பந்தங்கள் கையெழுத்து:**

- உயிரி தொழில் நுட்பக் கல்வி மற்றும் ஆராய்ச்சி மாணவர்களின் கல்வித் திறனை மேம்படுத்த, தனியார் கல்வி நிறுவனங்களுக்கும், 'டைசல்' நிறுவனத்திற்கும் இடையே, ஐந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.
- தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், 'டைடல்' பூங்காவுடன் இணைந்து, டைசல் உயிரி தொழில் நுட்ப பூங்கா அமைத்துள்ளது.
- இங்கு தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும், மத்திய அரசின் உயிரி தொழில் நுட்பத் துறையும் இணைந்து, உயிரி தொழில் நுட்ப முதன்மை கருவியாக்க மையத்தை அமைத்து உள்ளது.
- இந்த மையத்தின் வசதிகளைப் பயன்படுத்தி, உயிரி தொழில் நுட்ப கல்வி மற்றும் ஆராய்ச்சி மாணவர்களின் கல்வித் திறனை மேம்படுத்தவும், வேலை வாய்ப்புகளை அதிகரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- இதற்காக, சென்னையில் உள்ள பல தனியார் நிறுவனங்களுடன், டைசல் நிறுவனம் தலைமைச் செயலகத்தில், முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தது.
- 'சிப்காட்' நிறுவனம் சார்பில், 35 கோடி ரூபாய் செலவில், சிறுசேரி சிப்காட் தகவல் தொழில் நுட்ப பூங்காவில் மூன்று கருத்தரங்கு கூடங்கள், இரண்டு பயிற்சி மையங்கள் உள்ளிட்ட வசதிகளுடன், ஏற்றுமதி வணிக வசதிகள் மையமும், 1.56 கோடி ரூபாயில் தீயணைப்பு நிலையமும் அமைக்கப்பட்டு உள்ளன.
- திருப்பூர் மாவட்டத்தில் உள்ள நெருப்பெரிச்சல் கிராமத்தில், 10.19 கோடி ரூபாய் செலவில் ஆண்கள் தங்கும் விடுதி கட்டப்பட்டுள்ளது.

- காஞ்சிபுரம் மாவட்டம், இருங்காட்டுக்கோட்டை சிப்காட் தொழிற் பூங்காவில், 1.32 கோடி ரூபாய் செலவில் தீயணைப்பு நிலையம் கட்டடப்பட்டு உள்ளது. இதை முதல்வர் ஸ்டாலின், 'வீடியோ கான்பரன்ஸ்' வழியாக திறந்து வைத்தார்.

**மனித நேயத்திற்கான கோல்டன் விசா பெற்ற முதல் தமிழர்:**

- கோல்டன் விசா என்பது ஐக்கிய அமீரகத்தின் குடியுரிமை போன்றது. இந்த விசாவை வைத்திருப்பவர்கள் பத்து வருடங்களுக்கு அந்நாட்டின் குடிமகன்களாக கருதப்படுவார்கள்.
- இந்த நிலையில், கொரோனா காலக் கட்டம் மற்றும் பிற சமயங்களில் சமூக சேவையில் ஈடுபடுபவர்களை கவுரப்படுத்தும் வகையில் ஹுமானிடேரியன் பயனிர் கோல்டன் விசாவை ஐக்கிய அரபு அமீரகம் அறிமுகப்படுத்தி உள்ளது.
- இந்த விசாவை இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையை சேர்ந்த ஹமீது யாசின் என்பவருக்கு வழங்கியுள்ளது. மனித நேயத்திற்கான கோல்டன் விசாவை பெரும் முதல் தமிழர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**உலகளாவிய வாழ்வாதாரக் குறியீடு 2022 ல் பெங்களூரு 146 - வது இடம்:**

- ஐரோப்பியப் புலனாய்வுப் பிரிவு(EUI) சமீபத்தில் வாழ்வாதாரக் குறியீடு பட்டியல் 2022 ஐ வெளியிட்டது.
- இதில் 173 நகரங்கள் அவற்றின் வாழ்வாதாரம் அல்லது வாழ்க்கை நிலைமைகளின் அடிப்படையில் தர வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
- நிலைத் தன்மை, சுகாதாரம், கலாச்சாரம் மற்றும் சுற்றுச் சூழல், கல்வி மற்றும் உள் கட்டமைப்பு ஆகிய ஐந்தையும் அடிப்படையாகக் கொண்டு இந்த வாழ்வாதார குறியீடு 2022 உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்த பட்டியலில் 100 க்கு 54.4 மதிப்பெண்களுடன் பெங்களூரு 146 வது இடத்தைப் பிடித்துள்ளது.
- இதில் டெல்லி, மும்பை, சென்னை மற்றும் அகமதாபாத் ஆகிய நான்கு இந்திய நகரங்களும் மோசமான மதிப்புகளை பெற்று 140,141,142 மற்றும் 143 இடங்களை பிடித்துள்ளன.

**2 லட்சம் 'இல்லம் தேடி கல்வி மையம்' துவக்கி வைத்தார் முதல்வர் ஸ்டாலின்:**

- கொரோனா ஊரடங்கால், பள்ளிகள் திறக்கப்படாத காலத்தில், பள்ளி செல்லும் குழந்தைகளின் கல்வி பாதித்ததோடு, கற்றல் இடைவெளி ஏற்பட்டது.

- இதை சரி செய்ய, தமிழக அரசு, பள்ளிக் கல்வித் துறை சார்பில், 'இல்லம் தேடி கல்வி' திட்டம், 2021 அக்டோபரில் துவக்கப்பட்டது.
- அதன் இரண்டு லட்சமாவது மையத்தை, திருவண்ணாமலை அடுத்த ஆராஞ்சி கிராமத்தில், முதல்வர் ஸ்டாலின் துவக்கி வைத்தார். தொடர்ந்து, இல்லம் தேடி கல்வி திட்டம் தொடர்பான காணொலியையும், புகைப்பட விளக்க புத்தகத்தையும் வெளியிட்டார்.
- கடந்த ஜூன் 1 முதல் 12 வரை, இந்த திட்டத்தின் மூலம், குழந்தைகளிடம் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்க 'ரீடிங் மாரத்தான்' என்ற தொடர் வாசிப்பு போட்டி நடத்தப்பட்டது.
- திருச்சி லால்குடி வட்டாரம் முதலிடம், மதுரை அலங்காநல்லூர் வட்டாரம் இரண்டாம் இடம், மதுரை மேலூர் மூன்றாம் இடம் பிடித்தது.
- மேலும், சிறந்த தன்னார்வலர்களுக்கான தேர்வில், மதுரை மாவட்டம், சிறந்த மாணவர்களுக்கான தேர்வில், திருப்பத்தூர் மாவட்டமும் வென்றது.




**தேசிய குத்துச் சண்டை - தமிழகத்துக்கு இரு வெண்கலம்:**

- காட்டாங்குளத்தூரில் நடைபெற்ற இப்போட்டியின் கடைசி நாளான செவ்வாய்க்கிழமை, ஆடவருக்கான லைட் மிடில் வெயிட் (67-71 கிலோ) பிரிவில் தமிழகத்தின் ஜி. கபிலனும், மகளிருக்கான லைட் வெயிட் (57-60 கிலோ) பிரிவில் தமிழகத்தின் ஆர். மாலதியும் 3 -ஆம் இடம் பிடித்து வெண்கலப் பதக்கம் பெற்றனர்.
- இந்தப் போட்டியில் ஆடவர் பிரிவில் சர்வீசஸ் அணி 9 தங்கம், 2 வெள்ளி என 11 பதக்கங்களுடனும், மகளிர் பிரிவில் ஹரியாணா அணி 8 தங்கம், 3 வெள்ளி என 11 பதக்கங்களுடனும் போட்டியின் சிறந்த அணிகளாகத் தோவாகின.
- ஆடவர் பிரிவில் 2, 3 - ஆம் இடங்களை முறையே ஹரியாணா, மத்திய பிரதேசம் அணிகள் பிடிக்க, மகளிர் பிரிவில் மகாராஷ்டிர அணி 2 - ஆம் இடமும், தில்லி அணி 3 - ஆம் இடமும் பெற்றன.

**மாநில கல்விக் கொள்கை தொடர்பாக பொது மக்களிடம் கருத்து கேட்க நீதியரசர் முருகேசன் முழு முடிவு:**

- தமிழகத்திற்கென பிரத்யேகமாக கல்வி கொள்கை வடிவமைப்பதற்காக ஓய்வு பெற்ற நீதிபதி முருகேசன் தலைமையில் குழு அமைக்கப்பட்டு தற்போது 2 கூட்டங்களாக அந்த குழுவினர் ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

- இந்நிலையில், மாநிலம் முழுவதும் கல்வி கொள்கையை வடிவமைப்பதற்காக பொது மக்கள் அனைவரிடம் கருத்துக்களை பெற இக்குழு முடிவு செய்திருக்கிறது.
- அதன் படி தமிழகத்தை 8 மண்டலங்களாக பிரித்து மாநிலம் முழுவதும் கருத்து கேட்பு கூட்டங்கள் நடத்தி, அதன் மூலமாக கல்வி கொள்கை வரையறை குழுவானது ஆலோசனை நடத்தவிருக்கிறது.
- ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், பொது மக்கள் ஆகியோரிடம் கருத்துக்கள் கேட்கப்பட உள்ளது.
- மின்னஞ்சல் மற்றும் தபால் மூலம் பொது மக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம் என்றும், இதற்கான முகவரி விரைவில் வெளியிடப்படும் என்றும் கல்வி கொள்கை முழு தகவல் அளித்துள்ளது. மாநில கல்வி கொள்கை குழுவின் அடுத்த கூட்டம் ஜூலை 27 ல் நடைபெற உள்ளது.

**ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிக்குழு மானிய நிதி - ரூ. 1,128 கோடி ஒதுக்கியது தமிழக அரசு:**

- கிராமம், ஒன்றியம், மாவட்டம் உள்ளிட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகம், மின் கட்டணம், பராமரிப்பு, ஊதியம் உட்பட அனைத்து வகை செலவினங்கள் ஆகியவை மத்திய, மாநில அரசுகளின் நிதியுதவி, உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரம் ஆகியவற்றை கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- அந்த வகையில் மாநில அரசின் 5 ஆவது மாநில நிதிக் குழு மானிய நிதியாக ஒவ்வொரு ஆண்டும் தமிழகத்தின் மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.
- அதன் படி, 2021 - 22 ஆம் நிதி ஆண்டுக்கு 5 ஆவது மாநில நிதிக் குழு மானிய நிதியாக மொத்தம் ரூ.5 ஆயிரத்து 80 கோடியே 87 லட்சத்து 45 ஆயிரம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- இதில் முதல் தவணையாக கடந்த ஏப்ரல் மாதம் தொடங்கி ஜூன் மாதம் வரையில் மூன்று மாதங்களுக்கு மாவட்ட ஊராட்சிகளுக்கு மக்கள் தொகை அடிப்படையில் ரூ.871 கோடியே 6 லட்சத்து 928 ஒதுக்கப்பட்டுள்ளது.
- 388 ஊராட்சி ஒன்றியங்களுக்கு மக்கள் தொகை அடிப்படையில் 369 கோடியே 58 லட்சத்து 36 ஆயிரத்து 286 ரூபாயும், குறைந்த பட்ச ஒதுக்கீடாக 349 கோடியே 2 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

- அதே போல் 12 ஆயிரத்து 525 கிராம ஊராட்சிகளுக்கு மக்கள் தொகை அடிப்படையில் 410 கோடியே 94 லட்சத்து 23 ஆயிரத்து 571 ரூபாயும், குறைந்த பட்ச ஒதக்கீடாக 225 கோடியே 45 லட்சம் ரூபாயும் என மொத்தம் ஆயிரத்து 127 கோடியே 99 லட்சத்து 66 ஆயிரத்து 785 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை தமிழக அரசின் முதன்மை செயலாளர் அமுதா பிறப்பித்துள்ளார்.

**குடியரசுத் தலைவர் தேர்தலில் 99 சதவீத வாக்குகள் பதிவானது:**

- நாட்டின் 16 - வது குடியரசுத் தலைவருக்கான தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியின் வேட்பாளராக திரவுபதி முர்முவும், எதிர்க் கட்சிகள் சார்பில் முன்னாள் மத்திய அமைச்சர் யஷ்வந்த் சின்ஹாவும் போட்டியிடுகின்றனர்.
- இதற்கான வாக்குப்பதிவு காலை 10 மணிமுதல் மாலை 5 மணி வரை நடைபெற்றது. எம். பி மற்றும் எம். எல். ஏக்கள் வாக்குச் சீட்டு முறையில் குடியரசு தலைவர் தேர்தலில் வாக்களித்தனர்.
- எம். பிக்கள் வாக்களிப்பதற்காக டெல்லி நாடாளுமன்ற வளாகத்திலும், எம். எல். ஏக்கள் வாக்களிப்பதற்காக அந்தந்த மாநில சட்டமன்றத்திலும் வாக்குப்பதிவு நடைபெற்றது.
- டெல்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்குப்பதிவு மையத்தில் பிரதமர் நரேந்திர மோடி வாக்களித்து வாக்குப் பதிவை தொடங்கி வைத்தார். மாலை 5 மணிக்கு வாக்குப்பதிவு நிறைவடைந்தது.
- நாடாளுமன்ற உறுப்பினர்கள் 771 பேரும், சட்டப் பேரவை உறுப்பினர்கள் 4,025 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். இதில், ஒட்டு மொத்தமாக 99 சதவீத வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.
- தமிழ்நாடு, புதுச்சேரி, கர்நாடகா, கேரளா உள்ளிட்ட 12 சட்டப் பேரவைகளில் நடைபெற்ற வாக்குப் பதிவுகளில் 100 சதவீத வாக்குகள் பதிவானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**குடியரசுத் தலைவர் தேர்தல்: தமிழகக் கட்சிகளின் வாக்கு மதிப்புகள்:**

- தமிழகத்தில் குடியரசுத் தலைவர் தேர்தலில் பதிவாக உள்ள வாக்குகளின் மதிப்பு 81 ஆயிரத்து 84. இதில், தமிழக சட்டப் பேரவை உறுப்பினர்களின் வாக்கு மதிப்பு 41 ஆயிரத்து 184.
- மக்களவை உறுப்பினர்களின் வாக்கு மதிப்பு 27 ஆயிரத்து 300. மாநிலங்களவை உறுப்பினர்கள் வாக்கு மதிப்பு 12 ஆயிரத்து 600.

Adda247 தமிழ்

- குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற வேட்பாளர் 50 சதவீதம் அளவு வாக்கு மதிப்புகளைப் பெற வேண்டும்.
- மொத்த வாக்குகளின் மதிப்பு 10 லட்சத்து 86 ஆயிரத்து 431. அதில் 50 சதவீதம் பெறும் வேட்பாளர், இந்தியாவின் அடுத்த குடியரசுத் தலைவராக தேர்வு செய்யப்படுவார்.
- இந்தியாவில் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான வாக்கு மதிப்பு என்பது சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கான வாக்கு மதிப்பில் இருந்தே தொடங்குகிறது.
- 1971 - ஆம் ஆண்டு மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு, வாக்கு மதிப்பு கணக்கிடப்படுகிறது.
- ஒட்டு மொத்த சட்டப் பேரவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை ஆயிரத்தால் பெருக்கி வரக் கூடிய தொகையைக் கொண்டு, மக்கள் தொகையின் எண்ணிக்கையை வகுத்தால் ஒரு மாநிலத்தில் ஒரு சட்டப் பேரவைத் தொகுதி உறுப்பினரது வாக்கு மதிப்பு தெரிந்து விடும்.
- இந்தியாவிலேயே உத்தர பிரதேச மாநிலத்தில் மொத்தம் 403 பேரவைத் தொகுதிகள் உள்ளன. அந்த மாநிலத்தில் ஒட்டு மொத்த பேரவை உறுப்பினர்களின் வாக்கு மதிப்பு 83 ஆயிரத்து 824. இதைத் தொடர்ந்து, மேற்கு வங்கத்தில் 294 பேரவை உறுப்பினர்கள் உள்ளனர்.
- இந்த மாநிலத்தில் பேரவை உறுப்பினர்களின் மொத்த வாக்கு மதிப்பு 44 ஆயிரத்து 394.
- மகாராஷ்டிரம், பிகார் உள்ளிட்ட மாநிலங்களுக்கு அடுத்த படியாக தமிழகம் வருகிறது. இங்கு, ஒரு சட்டப் பேரவை உறுப்பினருக்கான வாக்கு மதிப்பு 176. மொத்த பேரவை உறுப்பினர்களின் வாக்கு மதிப்பு 41 ஆயிரத்து 184.
- நாடாளுமன்ற உறுப்பினர்கள்: இந்தியாவில் 543 மக்களவை உறுப்பினர் பதவியிடங்களும், 233 மாநிலங்களவை பதவியிடங்களும் உள்ளன.
- மொத்தமாக நாடாளுமன்ற இடங்களின் எண்ணிக்கை 776. நாட்டிலுள்ள சட்டப் பேரவை உறுப்பினர்களின் மொத்த வாக்கு எண்ணிக்கையான 5.43 லட்சத்தை மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கொண்டு (776) வகுக்கும் போது, ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் வாக்கு மதிப்பு கிடைக்கும். அதன் படி, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் (மக்களவை அல்லது மாநிலங்களவை) வாக்கு மதிப்பு 700.
- தமிழகத்தில் 234 சட்டப் பேரவைத் தொகுதிகளும், 39 மக்களவை, 18 மாநிலங்களவை இடங்களும் உள்ளன.

- இதில், ஆளும் திமுகவுக்கு பேரவையில் 133 உறுப்பினர்களும், மக்களவையில் 24 உறுப்பினர்களும், மாநிலங்கள் அவையில் 10 பேரும் உள்ளனர்.
- அதிமுகவுக்கு பேரவையில் 66 உறுப்பினர்களும், மாநிலங்களவையில் 4 பேரும், மக்களவையில் ஒருவரும் உள்ளனர்.
- தமிழக காங்கிரஸ் கட்சிக்கு பேரவையில் 18 பேரும், மக்களவையில் 8 பேரும், மாநிலங்களவையில் ஒருவரும் உள்ளனர்.
- ஒட்டு மொத்தமாக கணக்கிடும் போது, குடியரசுத் தலைவர் தேர்தலில் திமுக 47 ஆயிரத்து 208 வாக்கு மதிப்புகளை வைத்துள்ளது.

**தமிழ் நாடு திருநாள் விழா 2022:**

- தமிழ் நாடு திருநாள் விழா சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. இவ்விழாவில் தமிழறிஞர்களுக்கு விருதுகளும் மாணவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.
- பேரறிஞர் அண்ணா அவர்கள் நம் மாநிலத்திற்குத் தமிழ் நாடு எனப் பெயர் சூட்டி சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட ஜூலை 18 - ஆம் நாளைப் போற்றும் வண்ணம் தமிழ் நாடு திருநாள் என்ற பெயரில் மாபெரும் நிகழ்ச்சி சென்னை, கலை வாணர் அரங்கில் நடைபெற்றது.
- இவ்விழாவின் முதல் நிகழ்ச்சியாக மாநிலத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் முனைவர் ஜெ. ஜெயரஞ்சன் அவர்களின் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது.
- இதில் 'தமிழ் நாடு உருவான வரலாறு' என்ற தலைப்பில் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்களும், 'மொழி வாரி மாகாணமும் தமிழ் நாட்டில் நடந்த போராட்டமும்' என்ற தலைப்பில் திரு. ஆழி செந்தில் நாதன் அவர்களும், 'தமிழகத்துக்காக உயிர் கொடுத்த தியாகிகள்' என்ற தலைப்பில் திரு. வாலாசா வல்லவன் அவர்களும் 'தாய் நாட்டுக்குப் பெயர் சூட்டிய தனயன்' என்ற தலைப்பில் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களும் 'முத்தமிழறிஞர் கலைஞர் உருவாக்கிய நவீன தமிழ் நாடு' என்ற தலைப்பில் மருத்துவர் நா. எழிலன் அவர்களும் கருத்துரையாற்றினர்.

Adda247 தமிழ்



- மேலும், 2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது திரு. கயல் (கோ) தினகரன் அவர்களுக்கும், கபிலர் விருது பாவலர் கருமலைத் தமிழாழன் (எ) கி. நரேந்திரன் அவர்களுக்கும், 2021 ஆம் ஆண்டிற்கான உ.வே. சா விருது மருத்துவர் இரா. கலைக் கோவன் அவர்களுக்கும், அம்மா இலக்கிய விருது முனைவர் மு. சற்குணவதி அவர்களுக்கும், காரைக்கால் அம்மையார் விருது முனைவர் இரா. திலகவதி சண்முக சுந்தரம் அவர்களுக்கும் வழங்கினார்.

**உளவுத் துறை புதிய ஐஜியாக செந்தில் வேலன் நியமனம், ஆசியம்மாள் பணியிட மாற்றம்:**

- தமிழக உளவுத் துறையின் புதிய ஐஜி - யாக செந்தில் வேலன் நியமிக்கப்பட்டுள்ளார். உளவுத் துறை ஐஜியாக இருந்த ஆசியம்மாள் பணியிட மாற்றம் செய்யப்பட்டு, அமலாக்கப் பிரிவு ஐஜியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- உளவுத் துறையின் புதிய ஐஜி - யாக, காத்திப் போர் பட்டியலில் இருந்த செந்தில் வேலனை நியமித்து தமிழக உள் துறைச் செயலர் பனீந்தர ரெட்டி உத்தரவிட்டுள்ளார்.

  திருவல்லிக்கேணி காவல் துறை துணை ஆணையராக தேஷ்முக் சேகர் சஞ்சய் நியமனம்.
- மாநில மனித உரிமைகள் ஆணைய எஸ்.பி. - யாக மகேஸ்வரன் நியமனம். சென்னை பூக்கடை காவல்துறை துணை ஆணையராக ஆல்பர்ட் ஜான் நியமனம்.
- சீருடை பணியாளர் தேர்வு வாரியத்தின் காவல் கண்காணிப்பாளராக ராதா கிருஷ்ணன் நியமனம்.
- காவல் துறை நவீன மயமாக்கல் பிரிவு ஐஜி - யாக கண்ணன் நியமனம். ஏஎஸ்பிகளாக இருந்த சமய் சிங் மீனா, கிரண் ஸ்ருதி, தீபக் சிவாச், ஹர்ஷ் சிங், சாய் பிரணீத் ஆகியோர் எஸ்.பி. - க்களாக பதவி உயர்வு.

**நம் குடியிருப்பு நம் பொறுப்பு புதிய செயலியை அறிமுகப்படுத்திய அமைச்சர் தா.மோ. அன்பரசன்:**

- நம் குடியிருப்பு நம் பொறுப்பு திட்டத்திற்கான புதிய செயலியை அமைச்சர் தா.மோ. அன்பரசன் சென்னையில் அறிமுகம் செய்து வைத்துள்ளார். தமிழ் நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புதாரர்கள் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தங்களது தவணைகளை எளிய முறையில் செலுத்திட வேண்டும் என்பதற்காக நம்ம குடியிருப்பு என்ற புதிய செயலி இன்றைய தினம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- இந்த செயலியை குடியிருப்புதாரர்கள் தங்களது அலை பேசியில் பதிவிறக்கம் செய்து கொண்டு வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மாத தவணைத் தொகை, நம் குடியிருப்பு நம் பொறுப்பு திட்டத்திற்கான பராமரிப்பு தொகை, நிலுவைத் தொகை, போன்றவற்றை செலுத்தலாம்.
- www.tnuhdb.tn.gov.in என்ற இணைய தள முகவரியில் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகையினை QR code மூலமாகவும் செலுத்தலாம். நம் குடியிருப்பு நம் பொறுப்பு திட்டத்தின் கீழ் இதுவரை 417 குடியிருப்போர் நலச் சங்கம் உருவாக்கப்பட்டு 206 குடியிருப்போர் நலச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- குடியிருப்போர் நலச் சங்கம் பத்திரப் பதிவு துறையில் பதிவிற்கான கட்டணத்தை அரசால் குடியிருப்போர் நலச் சங்கத்திற்கு திருப்பி வழங்கப்படுகிறது.

**அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் குடும்ப அட்டைகளின் டிஜிட்டல் மயமாக்கம் நிறைவடைந்துள்ளது:**

- சுமார் 19.5 கோடி குடும்ப அட்டைகள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளன என்று மத்திய நுகர்வோர் நலன், உணவு மற்றும் பொது விநியோகத் துறை இணையமைச்சர் சாத்வி நிரஞ்சன் ஜோதி மக்களவையில் எழுத்து மூலம் அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.
- தமிழ் நாடு உட்பட 25 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் குடும்ப அட்டையுடன் ஆதார் எண் பதிவு 100% நிறைவடைந்துள்ளது.
- எஞ்சிய குடும்ப அட்டைகளில் ஆதார் பதிவை 2022 செப்டம்பர் 30 - க்குள் மேற்கொள்ள வேண்டுமென்று மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு அவகாசம் அளிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

**தகவல் தொழில் நுட்பவியல் துறை பெயர் மாற்றம் - அரசாணை வெளியீடு:**

- மாநிலத்தில் தகவல் தொழில் நுட்பத் துறையின் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கவும் மற்றும் மின் ஆளுகையின் வளர்ச்சியை உறுதி செய்யும் நோக்கத்துடனும் தகவல் தொழில் நுட்பவியல் துறை கடந்த 1998 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5 ஆம் தேதி உருவாக்கப்பட்டது.
- தகவல் தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொழில் நுட்ப சேவைத் துறைகளின் வளர்ச்சியானது ஒன்றுக் கொன்று தொடர்புடையதாகும். எனவே, ஒருங்கிணைந்த வளர்ச்சியை அடைவதற்கு முன் முயற்சியுடன் கூடிய ஒருங்கிணைந்த கொள்கை வழி அணுகு முறை தேவைப்படுகிறது.

- முதல் கட்டமாக, வளர்ந்து வரும் தொழில் நுட்பப் பிரிவுக்கு தலைமை தாங்கும் வகையில் தலைமை தொழில் நுட்ப அதிகாரி பதவி தகவல் தொழில் நுட்பவியல் துறையில் ஏற்கெனவே உருவாக்கப்பட்டுள்ளது.
- வளர்ந்து வரும் மற்றும் ஆழ் நிலைத் தொழில் நுட்பங்களில் தொடக்க நிலை நிறுவனங்கள் மூலம், புதுமைகளை உருவாக்குவதற்கு ஏதுவாக, தமிழ் நாடு தொழில் நுட்ப மையம் (iTNT Hub) ஒன்று சென்னையில் அரசால் நிறுவப்பட்டு வருகிறது.
- எனவே, மாநிலத்தில் தகவல் தொழில் நுட்பம், தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சேவைகள் மற்றும் டிஜிட்டல் தொழில் நுட்பச் சேவைகளின் வளர்ச்சியை வலுப்படுத்த இத்துறை, "தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை" என மறு பெயரிடப்படும் என்று அறிவிக்கப்பட்டு அதற்கான அரசாணை வெளியிடப்பட்டது.

**வடக்கு பட்டு பகுதியில் பழங்கால கட்டிட சுவர் பயன்பாட்டு பொருட்கள் கண்டெடுப்பு:**

- ஸ்ரீபெரும்புதூர் அருகே, ஒரகடம் அடுத்த வடக்கு பட்டு கிராமப் பகுதியில் தொல்லியல் துறை சார்பில் அகழ்வாராய்ச்சி பணிகள் கடந்த 3 ம் தேதி முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது.
- மேலும் அதனை சுற்றி பள்ளம் தோன்டிய போது பழங்கால கல் மணி, கண்ணாடி மணி, எலும்பு உள்ளிட்ட பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அங்கு கண்டெடுக்கப்பட்ட பொருட்களை ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.
- எந்த ஆண்டு வாழ்ந்த மக்கள் பயன்படுத்தியது, அவர்களின் கலாச்சாரம் குறித்து ஆய்வுக்கு பின்னர் தெரிய வரும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

**தமிழக காவல் துறையில் புதிய சீருடை 'லோகோ' அறிமுகம் - காவலர் முதல் டிஜிபி வரை ஒரே அடையாளம்:**

- தமிழ் நாட்டில் காவலர் முதல் டிஜிபி வரை அனைவருக்கும் காக்கி நிறச் சீருடை வழங்கப்பட்டுள்ளது. எனினும், ஒவ்வொருவருக்கும், அவரவர் அதிகாரம், அடிப்படைத் தகுதிகளுக்கு ஏற்ப சீருடை அடையாளப்படுத்தப்பட்டிருக்கும்.
- அதன் படி, டிஜிபியின் தோள் பட்டையில் ஐபிஎஸ், அசோக சின்னம், அதன் கீழ் குறுக்காக வைக்கப்பட்ட வாள், குறுந்தடி, தொப்பியில் வெள்ளி ஜரிகை ஆலிவ் இலை வடிவ ஐபிஎஸ் சின்னம், காலரில் ரிப்பன் இருக்கும்.

- கூடுதல் டிஜிபியின் சீருடையில், தோள் பட்டையில் ஐபிஎஸ், அசோக சின்னம், அதன் கீழ் குறுக்காக வைக்கப்பட்ட வாள், குறுந்தடி, தொப்பியில் வெள்ளி ஜரிகை ஆலிவ் இலை வடிவ ஐபிஎஸ் சின்னம் இருக்கும்.
- இதே போல, காவல் ஆய்வாளர்கள் சீருடையின் தோள் பட்டையில் டி.பி. (தமிழ் நாடு போலீஸ்), கயிறு, 3 ஸ்டார் இருக்கும்.
- உதவி ஆய்வாளர்களுக்கு இரண்டு ஸ்டார், தலைமைக் காவலருக்கு 3 பட்டைகள் இருக்கும். இவ்வாறு, காவல் துறையில் இரண்டாம் நிலைக் காவலர் முதல் டிஜிபி வரை, அனைத்துப் பிரிவு போலீஸாரின் நிலையைக் குறிக்கும் வகையில், சீருடை லோகோ அமைந்திருக்கும்.
- எனினும், ஒட்டு மொத்தமாக தமிழக காவல் துறை என்பதைக் குறிக்கும் வகையில், தமிழக போலீஸாரின் சீருடையில் எந்த அடையாளமும் இல்லை. எனவே, வட மாநிலங்களில் இருப்பது போல, மாநிலப் பெயரைக் குறிக்கும் வகையில், காவலர் சீருடையில் ஒரே மாதிரியான அடையாளம் வேண்டும் என்று நீண்ட நாட்களாக கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது.
- இதற்கு உரிய தீர்வு காணும் வகையில், கடந்த 10 ஆண்டுகளாக ஆலோசனைகள் நடத்தப்பட்டன. இந்நிலையில், தமிழக காவல் துறையில் முதல் முறையாக காவலர் முதல் டிஜிபி வரை அனைவரது சீருடையிலும் ஒரே மாதிரியான அடையாள 'லோகோ' இடம் பெற உள்ளது.
- அதில், ஸ்ரீவில்லிப்புத்தூர் கோபுரம், அசோக சின்னம், தேசியக் கொடி உள்ளிட்டவற்றுடன், 'தமிழ்நாடு காவல்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே உள்ள அடையாளச் சின்னங்களுடன் கூடுதலாக இந்த லோகோவும் இடம் பெறும்.
- அடுத்த மாதம் முதல் வாரத்தில் இந்த லோகோ, தமிழக போலீஸார் அனைவரின் சீருடையின் இடது கை பகுதியில் ஜொலிக்க உள்ளது. இந்த லோகோ வடிவமைப்பை, தமிழக காவல் துறை நவீனமயமாக்கல் கூடுதல் டிஜிபி சஞ்சய் குமார் செய்துள்ளார்.
- ஏறத்தாழ 100 லோகோக்களுக்கு மேல் தயாரித்து, அவற்றை கூர்ந்து ஆராய்ந்து, அவற்றில் ஒன்றை தேர்வு செய்ததாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

**மாணவர்களுக்கு உளவியல் ஆலோசனை வழங்கும் திட்டம் - முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்:**

- தமிழக பள்ளிக் கல்வித் துறை சார்பில் பள்ளி மாணவர்களுக்கு மன நலம், உடல் நலம் சார்ந்த விழிப்புணர்வு ஆலோசனை வழங்கப்பட உள்ளது. இதற்காக அமைக்கப்பட்டுள்ள சிறப்பு மருத்துவக் குழுவினர், 805 வாகனங்களில் ஒவ்வொரு பள்ளியாகச் சென்று மாணவர்களுக்கு உளவியல் ஆலோசனைகள் வழங்க உள்ளனர்.
- இந்தத் திட்டத்தின் தொடக்க விழா, சென்னை அசோக் நகரில் உள்ள அரசு மகளிர் மேல் நிலைப் பள்ளியில் நடந்தது. விழிப்புணர்வு வாகனத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார். அதன் பின் பள்ளியைப் பார்வையிட்டு மாணவிகளுடன் கலந்துரையாடினார்.




**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் நிதி ஒதுக்கீடு:**

- கடந்த 7.5.2022 அன்று தமிழ் நாடு சட்டப் பேரவையில் முதலமைச்சர் மு. க ஸ்டாலின்," 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலக்கூடிய மாணவர்களுக்கு அனைத்து பள்ளி நாட்களிலும் காலை வேளையில் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும்" என்று அறிவித்தார்.
- இந்நிலையில், மாநகராட்சி, நகராட்சி, ஊரக (கிராம ஊராட்சி) மற்றும் மலைப் பகுதிகளில் செயல்படும். 1545 அரசுப் பள்ளிகளில் பயிலும் 1,14,095 தொடக்க பள்ளி (1 முதல் 5 ஆம் வகுப்பு வரை) குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தினை 2022 - 2023 - ஆம் ஆண்டில் முதற் கட்டமாகச் செயல் படுத்திட ரூ.33.56 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து தமிழக அரசு இன்று ஆணையிட்டுள்ளது. மேலும், 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்' தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளும் தமிழக அரசு வெளியிட்டுள்ளது.
- மகளிர் சுய உதவிக் குழுவினரை பயன்படுத்தி முதல் கட்டமாக பரிசோதனை முறையில் 15 மாவட்டங்களில் 292 கிராம பஞ்சாயத்துகளில் உள்ள பள்ளிகளில் திட்டத்தை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

- இது தவிர சமையல் அடுப்பு, சிலிண்டர், பாத்திரங்கள் சமூக நலத் துறை மூலம் வழங்கப்படும்.
- சமையலுக்கு தேவையான மளிகை பொருட்கள், காய்கறிகள் உள்ளூர் சந்தையில் இருந்து வாங்கிக் கொள்ளலாம் அல்லது சுய உதவிக் குழுக்கள் பஞ்சாயத்து கூட்டமைப்புகள் திணை, அரிசி பயிரிட்டால் அதையும் பயன்படுத்தலாம்.
- சத்தான சிற்றுண்டி வழங்க ஒரு குழந்தைக்கு தினசரி ரூ.8.25 என்று தற்காலிகமாக ஒதுக்கப்படுகிறது.
- காலை உணவு சமைக்கும் சுய உதவிக் குழுவினர்களுக்கு மாதம் ரூ. 2,000 வழங்கப்படும்.

**மெரினா - கோவளம் வரை கடற்கரை சீரமைப்பு - ரூ.100 கோடி ஒதுக்கி அரசாணை வெளியீடு:**

- "கடற்கரையின் அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்படுத்துதல், கலை, கலாச்சார நிகழ்ச்சிகள் நடத்த வசதி செய்வதும் மேம்பாட்டு திட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது.
- கடந்த சட்ட பேரவையில் ஏப்ரல் மாதம் அமைச்சர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் மாநில கடலோர மண்டல மேலாண்மை ஆணையம் மற்றும் சுற்று சூழல் சார்நிலை மாற்றம் ஆகியோருடன் கலந்து ஆலோசித்து மெரினா முதல் கோவளம் வரையிலான 30 கி.மீ. நீள கடற்கரை பகுதியில் ரூ.100 கோடியில் மறு சீரமைப்பு மற்றும் புத்தாக்க பணிகள் மேற்கொள்வதற்கான புதிய அறிவிப்பை வெளியிட்டார்.
- இந்த அறிவிப்பை செயல்படுத்தும் விதமாக சென்னை பெரு நகர வளர்ச்சி குழுமத்தினருடைய உறுப்பினர் அரசுக்கு கடிதம் எழுதியுள்ளார்.
- சென்னை எண்ணூர் முதல் கோவளம் வரையிலான கடற்கரை பகுதியை பருவ கால மாற்றத்தின் அடிப்படையில் பாதுகாப்பதற்கும் மேலும் இந்த கடற்கரை பொறுத்தவரையில் மெரினா, பெசன்ட் நகர் கடற்கரையில் பொது மக்கள் அதிகளவில் வந்து செல்லும் இடமாக அமைந்துள்ளது.

**புத்தொழில் சூழமைவிற்கான லீடர் விருது:**

- தமிழ் நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினிடம் தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஒன்றிய அரசால் தமிழ் நாட்டிற்கு வழங்கப்பட்ட 2021 - ம் ஆண்டுக்கான புத்தொழில் சூழமைவிற்கான "லீடர்" விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

- புது தில்லியில் 4.7.2022 அன்று ஒன்றிய அரசின் தொழில் முன்னேற்றம் மற்றும் உள் நாட்டு வணிகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாநிலத்தில் புத்தொழில் சூழமைவினை வலுப்படுத்தும் நோக்கில் புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவான செயல்பாடுகளை முன்னெடுத்தற்காக தமிழ் நாட்டிற்கு லீடர் விருது வழங்கப்பட்டது.
- முந்தைய ஆண்டுகளில் புத்தொழில் சூழமைவில் வளர்ந்து வரும் மாநிலம் என்ற நிலையில் இருந்து தற்போது "லீடர்" நிலைக்கு தமிழ் நாடு முன்னேறியுள்ளது.

**இந்திய மொழிகளின் தொழில் நுட்ப மேம்பாடு - சென்னை ஐஐடியில் ஆய்வு மையம் தொடக்கம்:**

- இந்திய மொழிகளுக்கு செயற்கை நுண்ணறிவுடன் கூடிய தொழில் நுட்ப வளங்களை கட்டமைக்கும் நோக்கத்தில் சென்னை ஐஐடி சார்பில் 'ஏஐ4 பாரத்' என்ற திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- இதன் மூலம் கடந்த 2 ஆண்டாக இந்திய மொழி தொழில் நுட்பத்துக்காக இயந்திர மொழி பெயர்ப்பு (Machine Translation), தானியங்கிப் பேச்சு அறிதல் (Speech Recognition) உட்பட பல்வேறு பங்களிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- அதன் தொடர்ச்சியாக இந்திய மொழி தொழில் நுட்பத்தை மேம்படுத்தும் நோக்கத்தில் சென்னை ஐஐடியில் 'பாரத் நிலேகனி மையம்' தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- இதற்கு நிலேகனி தொண்டு நிறுவனம் ரூ.36 கோடி நிதியுதவி வழங்கியுள்ளது. இதன் தொடக்க விழா கிண்டி ஐஐடி வளாகத்தில் நடைபெற்றது. இந்த மையத்தை ஐஐடி இயக்குநர் வி. காமகோடி, நந்தன் நிலேகனி ஆகியோர் திறந்து வைத்தனர்.

**44 - வது செஸ் ஒலிம்பியாட் தொடங்கியதாக பிரதமர் அறிவித்தார்:**

- பிரதமர் திரு. நரேந்திர மோடி 44 - வது செஸ் ஒலிம்பியாட் போட்டியை சென்னையில் உள்ள ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கில் தொடங்கி வைத்தார்.
- தமிழ் நாடு ஆளுநர் திரு. ஆர். என். ரவி, தமிழ் நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின், மத்திய அமைச்சர்கள் திரு. அனுராக் சிங் தாக்கூர், திரு. எல். முருகன், சர்வதேச செஸ் கூட்டமைப்பு (ஃபிடே) தலைவர் திரு. ஆர்காடி ஓர்கோவிச் ஆகியோரும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.
- முன்னதாக செஸ் ஒலிம்பியாட் போட்டியின் முதலாவது ஜோதி ஓட்டத்தை புது தில்லியில் உள்ள இந்திரா காந்தி தேசிய விளையாட்டரங்கில் பிரதமர் ஜூன் 19, 2022 அன்று தொடங்கி வைத்தார்.

- கடந்த 40 நாட்களாக சுமார் 20,000 கி.மீ. தொலைவிற்கு சிறப்பு மிக்க 75 இடங்களை கடந்து போட்டி நடை பெறும் மகாபலிபுரத்தை செஸ் ஒலிம்பியாட் ஜோதி வந்தடைந்தது.
- 44 - வது செஸ் ஒலிம்பியாட் போட்டி சென்னை அருகே மகாபலிபுரத்தில் 2022, ஜூலை 28 - ந் தேதி தொடங்கி ஆகஸ்ட் 9 - ந் தேதி வரை நடைபெற உள்ளது.
- 1927 ஆம் ஆண்டு முதல் நடைபெறும் இப்போட்டி முதன் முறையாக இந்தியாவிலும், 30 ஆண்டுகளுக்குப் பிறகு ஆசியாவில் முதன் முறையாகவும் நடைபெறுகிறது.
- இப்போட்டியில் 187 நாடுகளை சேர்ந்த வீரர்கள் கலந்து கொள்கின்றனர்.
- இப்போட்டியில் இந்தியா 6 அணிகளைச் சேர்ந்த 30 வீரர்கள் பங்கேற்கின்றனர்.
- மாமல்லபுரத்தில் நடைபெறும் செஸ் ஒலிம்பியாட் போட்டியின் பொது பிரிவினருக்கான முதல் போட்டியில் இந்தியா விளையாட உள்ளது. அதைப் போன்று பெண்களுக்கான முதல் போட்டியில் அமெரிக்கா விளையாட உள்ளது.
- இப்போட்டியில் பங்கேற்பவர்களுக்கு காய்களை டாஸ் போட்டு தேர்ந்தெடுப்பார்கள். இதையடுத்து பிரதமர் அந்த காய்களை தேர்ந்தெடுத்தார்.
- அப்போது இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் கருப்பு நிற காய்களை பிரதமர் தேர்ந்தெடுத்தார். அதன் படி நடைபெறும் முதல் போட்டியில் இந்திய வீரர்கள் மற்றும் அமெரிக்கா வீரர்கள் கருப்பு நிற காய்களுடன் விளையாட உள்ளனர்.

**சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தின் 42 - வது பட்டமளிப்பு விழா பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்பு:**

- சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தின் 42 - வது பட்டமளிப்பு விழா, பல்கலை வளாகத்தில் உள்ள விவேகானந்தர் கலையரங்கில் நடந்தது. இதில், சிறப்பு விருந்தினராக பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று, பல்வேறு பிரிவுகளில் 69 மாணவர்களுக்கு பட்டங்கள், பதக்கங்களை வழங்கினார்.
- பட்டமளிப்பு விழா தொடங்கியதும், உயர் கல்வி அமைச்சரும் பல்கலைக் கழக இணை வேந்தருமான க. பொன் முடி அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.
- துணை வேந்தர் ரா. வேல் ராஜ் பல்கலைக் கழக சாதனைகளை விளக்கினார். அதைத் தொடர்ந்து, பல்கலைக் கழக வேந்தரும் ஆளுநருமான ஆர். என். ரவி. பட்டமளிப்பு விழாவை தொடங்கிவைத்தார்.

- முதல்வர் மு.க. ஸ்டாலின் சிறப்புரை ஆற்றினார். அதன் பின், பல்வேறு பிரிவுகளில் சிறந்த மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களையும், பதக்கங்களையும் பிரதமர் மோடி வழங்கினார்.

**2022 அக்டோபரில் உலகளாவிய புலிகள் உச்சி மாநாடு:**

- முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள டிவிட்டர் பதிவில், 'தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் கணக்குப் படி 264 புலிகளுடன் இந்தியாவில் உள்ள புலிகளின் எண்ணிக்கையில் சுமார் 10 விழுக்காடு தமிழ் நாட்டில் தான் உள்ளது.
- புலிகள் பாதுகாப்பில் தமிழகத்தின் முன்னோடி முயற்சிகளுக்கு பொருத்தமாக 2022 அக்டோபர் மாதம் சென்னையில் ஒன்றிய அரசுடன் இணைந்து தமிழ் நாடு அரசால், உலகளாவிய புலிகள் உச்சி மாநாடு நடத்தப்படும் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்' என தெரிவித்துள்ளார்.

**டிஎன்பிஎல் கோப்பையை பகிர்ந்து கொண்ட சேப்பாக் - கோவை அணிகள்:**

- டிஎன்பிஎல் இறுதிப் போட்டி கோவையில் உள்ள கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது. இதில் முதலில் பேட் செய்த லைகா கோவை கிங்ஸ் அணி 17 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகள் இழப்பிற்கு 138 ரன்கள் சேர்த்தது.
- 139 ரன்கள் இலக்குடன் ஆடிய சேப்பாக் சூப்பர் கில்லீஸ் அணி, 4 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட்டுகள் இழப்பிற்கு 14 ரன்கள் எடுத்திருந்தது. அப்போது திடீரென மழை காரணமாக ஆட்டம் தடைபட்டது.
- தொடர்ந்து மழை இருந்த காரணத்தால் கோப்பை இரு அணிகளுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டது.

**உசிலம்பட்டி அருகே கோடாரி கருவியும் 2,000 ஆண்டு பழமையான முது மக்கள் தாழி கண்டெடுப்பு:**

- உசிலம்பட்டி அருகே புத்தூர் மலையடிவாரத்திலுள்ள அயன் மேட்டுப்பட்டியில், நிலத்தை சீர்படுத்திய போது, 2,000 ஆண்டுகளுக்கு முந்தைய முது மக்கள் தாழி கண்டெடுக்கப்பட்டது.
- அதற்குள் விவசாய பணிக்கு பயன்படுத்தும் இரும்பு கோடாரியும் இருந்தது. அக்காலத்தில் இப்பகுதி பாண்டிய நாடு - சேர நாட்டை இணைக்கும் வணிகப் பாதையாக இருந்துள்ளது.
- இரும்பால் செய்த போர் கருவியாக இல்லாமல், கோடாரி அமைப்புடன் கிடைத்திருப்பது விவசாயம் சார்ந்த பணிகள் நடந்துள்ளதற்கு ஆதாரமாக உள்ளது.

**நாட்டின் மிக உயரிய ஜனாதிபதி கொடி பெற்று தமிழக போலீசுக்கு பெருமை:**

- ராணுவம், போலீஸ் உள்ளிட்ட பாதுகாப்பு படை பிரிவுகளுக்கு வழங்கப்படும், நாட்டின் மிக உயரிய, ஜனாதிபதியின் கவுரவ கொடியை பெற்றதன் வாயிலாக, தமிழக காவல் துறைக்கு பெருமை கிடைத்துள்ளது.
- சென்னையில் நடந்த விழாவில், ஜனாதிபதி கொடியை, துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, தமிழக போலீசாருக்கு வழங்கி பெருமை சேர்த்தார்.
- நாட்டில் சிறந்த படைக்கான கவுரவமும் பெற்று, தமிழக போலீஸ் சாதனை படைத்துள்ளது. பாதுகாப்பு படைகள் மற்றும் போலீசில் திறம்பட பணியாற்றுவோருக்கு ஜனாதிபதி விருது வழங்கப்படும்.
- அதே போல, ராணுவம் மற்றும் போலீஸ் படையினரை கவுரவிக்கும் வகையில், ஜனாதிபதியின் கவுரவக் கொடி வழங்கப்படுகிறது.




**குடியரசுத் துணைத் தலைவர் வெங்கைய நாயுடுவின் பிறந்த நாளையொட்டி, வாழ்த்துத் தெரிவித்தார் முதல்வர் மு.க. ஸ்டாலின்:**

- குடியரசுத் துணைத் தலைவர் வெங்கைய நாயுடுவின் பிறந்த நாளையொட்டி, வாழ்த்துத் தெரிவித்த முதல்வர் மு.க. ஸ்டாலின் அவருக்கு "சாமானியர் ஆட்சி - திமுகவும் தமிழகத்தில் அரசியல் உருவாக்கங்களும்,1949 - 1967 (Rule of the Commoner - DMK and Formations of the Political in Tamil Nadu, 1949-1967)" என்ற நூலை பரிசளித்தார்.
- இந்த நூலை, ராஜன் குறை கிருஷ்ணன் (டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் பல்கலை. தில்லி), ரவீந்திரன் ஸ்ரீராமச்சந்திரன் (அசோகா பல்கலை., சோனி பேட்), விளம் எஸ் சுப குணராஜன் ஆகியோர் எழுதியுள்ளனர்.

**மாமல்லபுரத்தில் "சிற்பக் கலைத் தூண்":**

- மாமல்லபுரத்தில் கைவினை கலையில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களின் நலனுக்காக "கைவினை சுற்றுலா கிராமம்" என்ற திட்டம் மாநில மற்றும் ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- இதன் ஒரு பகுதியாக, மாமல்லபுரத்தின் நுழைவு வாயிலில் 45 அடி உயரத்தில் அழகிய "சிற்பக் கலைத் தூண்" கலை நயமிக்க பல்லவர் கால சிம்மம், யாழி, தோகை விரித்தாடும் மயில்கள், யானைக் கூட்டம், ஆகியவைகளின் உருவங்கள் பொறிக்கப்பட்டு மாமல்லபுரத்திற்கு வருகைப் புரியும் உள்ளூர் மற்றும் வெளி நாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

**ஆதிச்ச நல்லூரில் நடந்து வரும் அகழாய்வு பணியில் மனித எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது:**

- ஆதிச்ச நல்லூரில் நடந்து வரும் அகழாய்வு பணியில் மனித எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இதற்கு முன் கண்டுபிடிக்கப்பட்ட முது மக்கள் தாழிகளில் ஏதாவது ஒன்று அல்லது இரண்டு எலும்புகள் மட்டுமே இருந்துள்ள நிலையில், தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள 2 முது மக்கள் தாழியில் தலை, தாடை, பல், கை, கால், முதுகு எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**2021 ஆம் ஆண்டிற்கான தொழில் புரிய ஏதுவான மாநிலங்களுக்கான தர வரிசையில் தமிழ்நாடு 3 வது இடம்:**

- 2021 ஆம் ஆண்டிற்கான தொழில் புரிய ஏதுவான மாநிலங்களுக்கான தர வரிசையில் சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுள் தமிழ்நாடு 3 வது இடத்திற்கு உயர்ந்துள்ளது. 2020 ஆம் ஆண்டில் 14 வது இடத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

**இல்லம் தேடிக் கல்வி திட்டம்:**

- இல்லம் தேடிக் கல்வி திட்டத்தின்" 2 இலட்சமாவது மையத்தைத் திருவண்ணாமலையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 8.7.2022 அன்று தொடங்கி வைத்தார்.
- தமிழகத்தில் 20 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை காணொலியில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 7.7.2022 அன்று திறந்து வைத்தார்.

**'நம்ம குடியிருப்பு' செயலி:**

- தமிழ் நாடு நகர்ப் புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புதாரர்கள் தவணைகளை எளிய முறையில் செலுத்தும் வகையில் 'நம்ம குடியிருப்பு என்ற புதிய செயலியை தமிழ் நாடு நகர்ப் புற வாழ்விட மேம்பாட்டு வாரியத் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் 20.7.2022 அன்று வெளியிட்டார்.

**தரமான கல்வியை அளிப்பதில் தேசிய அளவில் சிறந்து விளங்கும் கல்லூரிகளுக்கான தர வரிசைப் பட்டியல் சென்னை மருத்துவக் கல்லூரி 12 ஆவது இடம்:**

- தரமான கல்வியை அளிப்பதில் தேசிய அளவில் சிறந்து விளங்கும் கல்லூரிகளுக்கான தர வரிசைப் பட்டியல் சென்னை மருத்துவக் கல்லூரி 12 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

- தென்னிந்தியாவிலேயே முதன் முறையாக மருத்துவப் பயிற்சிக்காக சென்னை மருத்துவப் பள்ளியானது கடந்த 1835 ஆம் ஆண்டு பிப்ரவரி 13 - ஆம் தேதி தொடங்கப்பட்டது.
- 1850 - ஆம் ஆண்டு அக்டோபர் 1 - ஆம் தேதி சென்னை மருத்துவப் பள்ளியானது சென்னை மருத்துவக் கல்லூரியாக மாற்றப்பட்து.

**இஸ்லாமியர்களின் புனித தலமான மெக்காவில் நடைபெறும் அரஃபா நாள் சொற்பொழிவுகள் இனி தமிழ் மொழியிலும் ஒலி பரப்பப்படும்:**

- இஸ்லாமியர்களின் புனித தலமான மெக்காவில் நடைபெறும் அரஃபா நாள் சொற்பொழிவுகள் இனி தமிழ் மொழியிலும் ஒலி பரப்பப்படும் என சௌதி அரேபியா அரசு அறிவித்துள்ளது.
- நபிகள் நாயகம் இறுதியாக அரஃபா குன்றின் மீது சொற்பொழிவாற்றிய நாளை இஸ்லாமியர்கள் புனித நாளாக கொண்டாடி வருகின்றனர்.
- இதன் படி, புனித மெக்காவில் இவ்வாண்டு (2022) முதல் முறையாக, இமாமின் உரை தமிழிலும் உடனுக்குடன் மொழி பெயர்த்து நேரலையாக ஒலிப்பரப்பானது.
- இந்திய நாட்டின் விடுதலைக்கு வித்திட்ட வேலூர் சிப்பாய் புரட்சியின் 216 ஆம் ஆண்டின் நினைவு தினம் 10.7.2022 அன்று வேலூரில் அனுசரிக்கப்பட்டது.
- விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே உள்ள வெங்கடேஸ்வரபுரம் கிராமத்தில் 4,000 ஆண்டுகள் பழமையான இரும்பு உருக்கு உலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- "கல்வியும், மருத்துவமும் தமிழ் நாடு அரசின் இரண்டு கண்கள்" என காமராஜர் பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**தமிழ் நாட்டில் முதன் முறையாக யூதர்களின் சூத பள்ளியைக் குறிக்கும் கல்வெட்டு கண்டெடுப்பு:**

- தமிழ் நாட்டில் முதன் முறையாக யூதர்களின் சூத பள்ளியைக் குறிக்கும் கி.பி.13 - ம் நூற்றாண்டு தமிழ் கல்வெட்டை ராமநாதபுரம் அருகே வாலாந்தரவையில் ராமநாதபுரம் தொல்லியல் ஆய்வு நிறுவனம் கண்டெடுத்துள்ளது.
- ஸ்வஸ்திஸ்ரீ எனத் தொடங்கும் இக்கல்வெட்டில் சூத பள்ளியான ஐந்நூற்றுவன் பெரும் பள்ளிக்கு தானமாக வழங்கப்பட்ட காணியாவதுக்கு (உரிமை நிலத்தின்) எல்லை சொல்லும் போது, அங்கிருந்த பள்ளிகள், நிலங்கள், தோட்டங்கள் குறிப்பிடப்படுகின்றன.
- பெரிய பட்டினத்தில் சூத பள்ளி, தரிசப் பள்ளி, பிழார் பள்ளி ஆகிய பள்ளிகள் இருந்ததாக கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- சைவ, வைணவக் கோயில்கள் தவிர்த்த பிற மத வழிபாட்டிடங்கள் பள்ளி என அழைக்கப்பட்டுள்ளது. இதில் சூத பள்ளி என்பது யூதர்களின் பள்ளி ஆகும்.
- தமிழில் ய எனும் எழுத்து மேற்கத்திய மொழிகளில் 'ச' வாகத் திரியும். ஆகவே சூத பள்ளி என்பது யூதர்களின் பள்ளி ஆகும்.
- ஐந்நூற்றுவர் எனும் வணிகக் குழுவினர் யூதர்களுக்கு பெரிய பட்டினத்தில் பள்ளி கட்டிக் கொடுத்துள்ளனர்.
- பெரிய பட்டினத்தில் இருந்த மரியம் என்ற யூதப் பெண்ணின் ஹீப்ரு மொழி கல்லறைக் கல்வெட்டு மத்திய தொல்லியல் துறையின் 1946 - 47 - ம் ஆண்டறிக்கையில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது.

**கழிவு நீர் மேலாண்மையில் 100% செறிவூட்டல் பெற்ற தமிழ் நாட்டின் பாப்பாங்குழி கிராமம்:**

- கழிவு நீர் மேலாண்மையில் 100% செறிவூட்டல் பெற்ற தமிழ் நாட்டின் பாப்பாங்குழி கிராமம்: தமிழ் நாட்டின் காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு உட்பட்ட ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்தில் உள்ள பாப்பாங்குழி கிராமப் பஞ்சாயத்து, சமுதாய உறுப்பினர்கள் மற்றும் அரசு அதிகாரிகளின் ஒருங்கிணைந்த முயற்சி காரணமாக, கழிவு நீர் மேலாண்மை திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளது.
- இந்த திட்டத்தின் கீழ் வீடு வாரியாகவும், சமுதாய ரீதியாகவும் கழிவு நீர் தொட்டிகள் அமைக்கப்பட்டு, முதலில் வடிகட்டப்படும் சாக்கடை கழிவு நீர் பின்னர் சுத்திகரிக்கப்படுகிறது.
- இதன் மூலம் அந்த கிராமத்தில் தினந்தோறும் 42,000 லிட்டர் கழிவு நீர் சுத்திகரிக்கப்படுகிறது.
- தூய்மை இந்தியா இயக்கம் - கிராமப் புற திட்டத்தின் 2 - ம் கட்டத்தின் ஒருங்கிணைந்த அம்சமாக கழிவு நீர் மேலாண்மை இயக்கம் மேற்கொள்ளப்படுகிறது.
- பாப்பாங்குழி கிராமத்தில் தினந்தோறும் பயன்படுத்தப்படும் 60,000 லிட்டர் தண்ணீரில் 70 சதவீதம், பாத்திரம் கழுவுதல், துணி துவைத்தல் மற்றும் குளியலறையிலிருந்து கழிவு நீராக வெளியேறுகிறது.

**இந்திய தொழில் நுட்ப கழகம் சர்வதேச விருது:**

- இந்திய தொழில் நுட்ப கழகம் - சென்னையின், புதுமை கண்டுபிடிப்பு மற்றும் தொழில் முனைவுக்கான கோபால கிருஷ்ணன் - தேஷ் பாண்டே மையம் (IIT Madras Gopalakrishnan-Deshpande Centre) தொழில் நுட்ப வணிக மயமாக்கலில் சிறந்த நடைமுறைக்கான சர்வதேச விருதை (International Award for 'Exemplary Practice in Technology commercialisation') வென்றுள்ளது.

- அமெரிக்காவின் ஓஹியோ மாகாணத்திற்கு உட்பட்ட க்ளீவ்லாந்தில் நடைபெற்ற 11 வது வருடாந்திர தேஷ் பாண்டே கருத்தரங்கில் இந்த விருது வழங்கப்பட்டது.
- தேஷ் பாண்டே அறக்கட்டளை மற்றும் மசாசூசெட்ஸ் லோவெல் பல்கலைக் கழகம் இணைந்து 2012 ம் ஆண்டு தொடங்கிய உயர்க் கல்வியில் புதுமை கண்டுப்பிடிப்பு மற்றும் தொழில் முனைவுக்கான தேஷ் பாண்டே கருத்தரங்கம், கல்வியாளர்கள், கொள்கை வகுப்போர் மற்றும் பயிற்சியாளர்கள் தங்களது கல்லூரி மற்றும் பல்கலைக் கழகங்கள் வாயிலாக தொழில் முனைவை ஒருங்கிணைப்பதற்கான சிறந்த நடைமுறைகள் குறித்து விவாதிப்பதற்காக தொடங்கப்பட்டது.
- சென்னை ஐஐடியின் கோபால கிருஷ்ணன் - தேஷ் பாண்டே மையம், கருத்துரு முதல் உற்பத்தியை அதிகரிப்பது வரையிலான ஸ்டார்ட் அப் வாழ்க்கை சக்கரம் மற்றும் அதன் தேசிய எதிர்ப்பார்ப்புகளை பூர்த்தி செய்வதில் சிறந்து விளங்குவதாக விருது குழு அறிவித்துள்ளது.

**செம்பியன் மகா தேவியின் உலோக சிலை அமெரிக்காவில் உள்ள அருங்காட்சியகத்தில் கண்டுபிடிப்பு:**

- தமிழகத்திலிருந்து கடத்தி செல்லப்பட்ட ஆயிரம் ஆண்டுகள் பழமையான, சோழப் பேரரசி செம்பியன் மகா தேவியின் உலோக சிலை அமெரிக்காவில் உள்ள அருங்காட்சியகத்தில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- அதை தமிழகம் கொண்டு வர சிலை கடத்தல் தடுப்பு பிரிவு போலீஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

**தமிழக சட்டப் பேரவையில் 6 மசோதாக்களுக்கு ஒப்புதல்:**

- தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டு நிலுவையில் இருந்த 21 மசோதாக்களில் 6 மசோதாக்களுக்கு ஆளுநர் ஆர். என். ரவி ஒப்புதல் அளித்துள்ளார்.
- இதன் படி தமிழ் நாடு மதிப்புக் கூட்டப்பட்ட வரி சட்ட மசோதா சம்பளம் வழங்குதல் திருத்த மசோதா, கூட்டுறவு சங்கங்களின் 4 - வது திருத்த மசோதா, கூட்டுறவு சங்கங்களின் 3 - வது திருத்த மசோதா, உள் கட்டமைப்பு மேம்பாட்டு திருத்த மசோதா, தடுப்புச் சட்டத்தில் திருத்த மசோதா ஆகிய 6 மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் வழங்கியுள்ளார்.

- சிவகாசி அருகே விஜய கரிசல் குளம் வைப்பாற்றங்கரையில் நடக்கும் அகழாய்வில் இரு கற்கால கருவிகள் கண்டெடுக் கப்பட்டன.

**இந்தியாவைச் சேர்ந்த 5 சதுப்பு நிலங்கள் சர்வதேச பாதுகாப்புக்கான 'ராம்சர்' பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளன:**

- தமிழகத்தின் பள்ளிக்கரணை சதுப்பு நிலம், பிச்சாவரம் அலையாத்திக் காடுகள், கரிக்கிலி பறவைகள் காப்பகம் உள்ளிட்ட இந்தியாவைச் சேர்ந்த 5 சதுப்பு நிலங்கள் சர்வதேச பாதுகாப்புக்கான 'ராம்சர்' பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளன.
- ராம்சர் பட்டியலில் இந்தியாவில் உள்ள சதுப்பு நிலங்கள் ஏற்கெனவே இணைக்கப்பட்டுள்ளன.
  இந்நிலையில், தமிழகத்தில் உள்ள பள்ளிக்கரணை சதுப்பு நிலம், பிச்சாவரம் சதுப்பு நிலம், கரிக்கிளி பறவைகள் சரணாலயம் ஆகியவையும் மிஸோரத்தின் பாலா சதுப்பு நிலம், மத்திய பிரதேசத்தின் சாக்யநகர் சதுப்பு நிலம் ஆகியவையும் ராம்சர் பட்டியலில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளன.
- இத்துடன் இந்தியாவில் உள்ள ராம்சர் சதுப்பு நிலங்களின் எண்ணிக்கை 54 - ஆக அதிகரித்துள்ளது.
- சதுப்பு நிலங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக ஈரானில் உள்ள ராம்சர் நகரில் 1971 - ஆம் ஆண்டு சர்வதேச ஒப்பந்தம் கையொப்பமானது. அந்த ஒப்பந்தத்தின் கீழ் சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்த சதுப்பு நிலங்களைக் கூடுதல் கவனம் செலுத்தி பாதுகாக்க உறுதியேற்கப்பட்டது.
- முக்கியமாக, சதுப்பு நிலங்களின் அழிவைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள நாடுகள் உறுதியேற்றன.
- ரயில் நிலையங்களில் உள்ளூர் பொருட்கள் விற்பனை செய்யும் ஒரு நிலையம், ஒரு பொருள் திட்டத்தின் கீழ் இந்தியாவில் உள்ள ரயில் ரயில் நிலையங்களில் அதிக விற்பனையான பொருட்களை காஞ்சிப் பட்டு முதல் இடத்தில் உள்ளது.
- நாட்டின் முதல் தென்னை மகத்துவ மையம் திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே திருமூர்த்தி மலையிலுள்ள மத்திய அரசின் தென்னை வளர்ச்சி வாரியத்துக்கு சொந்தமான, செயல் விளக்க மற்றும் விதை உற்பத்தி பண்ணையில் அமைக்கப்பட்டுள்ளது.
- உச்சநீதிமன்ற தமிழக அரசின் வழக்குரைஞராக சபரிஷ் சுப்ரமணியன் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

- தமிழ்நாடு அரசின் தகவல் தொழில் நுட்பவியல் துறையின் பெயர் " தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை" என பெயர் மாற்றம் செய்யப்படுகிறது.
- சென்னை கிண்டி கிங் இன்ஸ்டிட்யூட் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள குரங்கு அம்மைக்கான பரிசோதனை மையத்தை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.

**'இன்னுயிர் காப்போம் நம்மை காப்போம் 48' மருத்துவத் திட்டத்தில் தமிழகத்தில் மதுரை அரசு மருத்துவமனை முதலிடம் வகித்துள்ளது.**

- விபத்துகளில் காயமடைந்தவர்கள் உயிரைக் காப்பாற்றும் 'நம்மை காப்போம் 48 மருத்துவத் திட்டத்தில் தமிழகத்தில் மதுரை அரசு மருத்துவமனை முதலிடம் வகித்துள்ளது.
- முதல்வர் ஸ்டாலின் அவர்கள் கடந்த டிசம்பர் 18 ம் தேதி மேல் மருவத்தூர் மருத்துவமனையில் இன்னுயிர் காப்போம், நம்மை காக்கும் 48' என்ற திட்டத்தை தொடங்கி வைத்தார்.
- தமிழக எல்லையில் யாருக்கு விபத்து நேரந்தாலும் 680 க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் உடனடியாக சிகிச்சைக்கு அனுமதிக்க செய்வது, அனுமதிக்கப்ட்ட முதல் 48 மணி நேரத்தில் ஒரு லட்சம் ரூபாய் வரை சிகிச்சை வழங்கி அவர்கள் உயிர்கள் காப்பாற்றப்படுகிறது. இந்த திட்டம் இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டுமே செயல்படுத்தப்படுகிறது.
- மலையாள மனோரமா நியூஸ் சார்பில் நடை பெற்ற 'இந்தியா - 75' என்ற தலைப்பில் கேரள மாநிலம், திருச்சூரில் நடைபெற்ற கருத்தரங்கில் 30.7.2022 அன்று காணொலிக் காட்சி வாயிலாக கலந்து கொண்டு தமிழ் நாடு முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.
- இந்திய மொழி தொழில் நுட்பத்தின் தரத்தை மேம்படுத்தி சமூகத் தாக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில், ஏஜ. பாரத் நிலேகனி மையம் சென்னை ஐஐடியில் தொடங்கப்பட்டுள்ளது. ரோஹிணி மற்றும் நந்தன் நிலேகனி ஆகியோர் நிலேகனி தொண்டு நிறுவனம் மூலம் இந்த மையத்துக்கு நிதியுதவியாக ரூ.36 கோடி வழங்கியுள்ளனர்.
- பிளஸ் 1 மாணவர்களுக்கு மிதிவண்டி வழங்கும் திட்டத்தை, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 22 7.2022 அன்று தொடக்கி வைத்தார்.



- சர்வதேச ரோட்டரி சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜெனிஃபர் ஜோன்ஸ் சென்னைக்கு வருகை புரிந்து ரூ.200 கோடி மதிப்பிலான சமூக நலத் திட்டங்களைத் தொடக்கி வைத்தார்.

**குழந்தைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்ட மாநிலங்களில் தமிழகம் 2 - வது இடம்:**

- இந்தியாவில் கடந்த 2021 - 22 ஆம் ஆண்டு அதிக குழந்தைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்ட மாநிலங்களில் தமிழகம் 2 - வது இடத்தில் உள்ளது.
- இந்தியாவில் 2021 - 22 - ஆண்டில் மொத்தம் 13,271 குழந்தைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.
- இதில் அதிக பட்சமாக பஞ்சாப்பில் 4867 பேரும், தமிழகத்தில் 2586 பேரும் மீட்கப்பட்டுள்ளனர்.

**"பேனா வடிவ நினைவுச் சின்னம்":**

- முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி நினைவாக அவரது நினைவிடத்தின் பின் பகுதியில் கடலுக்குள் 42 மீ உயரத்தில் "பேனா வடிவ நினைவுச் சின்னம்" அமைக்க தமிழ் நாடு கடலோர மண்டல ஆணையம் அனுமதி அளித்துள்ளது.
- காந்திய மக்கள் இயக்கம் என்ற கட்சியின் பெயரை 'காமராஜர் மக்கள் இயக்கமாக மாற்றுவதாக தமிழருவி மணியன் அறிவித்துள்ளார்.
- தென்னிந்தியாவிலே முதல் முறையாக திருநங்கைகளுக்கான ரோட்டராக்ட் கிளப் ஆஃப் டிரான்ஸ்மாம்' கிளப் கோவையில் தொடங்கப்பட்டுள்ளது.
- கிராம சபைக் கூட்டங்கள் நடத்தும் செலவின வரம்பை ரூ.1000 - ல் இருந்து ரூ.5000 ஆக தமிழக அரசு உயர்த்தியுள்ளது.
- தமிழ் நாடு அரசின் தொல்லியல் துறையின் சார்பில் விருதுநகர் மாவட்டம் வெம்பக் கோட்டையில் நடைபெற்று வரும் அகழ்வாய்வில் சுடு மண்ணால் ஆன, திமிலுடன் கூடிய காளை உருவம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

**சிறு, குறு, நடுத்தர தொழிலில் முதலிடம்: விருதுநகர் மாவட்டத்துக்கு தேசிய விருது**

- இந்திய அளவில் முன்னேற விழையும் மாவட்டங்களில் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிலில் சிறப்பாக செயல்பட்டதற்காக விருதுநகர் மாவட்டம் முதலிடம் பெற்றுள்ளது
- நடுவணரசின் NITI ஆயோக் அமைப்பினர் நாட்டின் பல்வேறு மாநிலங்களிலுள்ள மாவட்டங்களை ஆய்வு செய்தனர். அதில், 112 பின் தங்கிய மாவட்டங்கள் முன்னேற விழையும் மாவட்டங்களாக தேர்வு செய்யப்பட்டன. இதில் தமிழ் நாட்டில் இராமநாதபுரம், விருதுநகர் மாவட்டங்களும் அடங்கும்.

- சுகாதாரம், ஊட்டச்சத்து, கல்வி, வேளாண்மை, நீர்வள ஆதாரம் போன்ற உள் கட்டமைப்பு ஆகியவற்றை மேம்படுத்தி தொழில் வளர்ச்சிக்கு தேவையான அடிப்படை தேவைகளை உருவாக்குவது மற்றும் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்வது இதன் முக்கிய நோக்கமாகும்.
- இந்நிலையில், சிறு, குறு, நடுத்தர நிறுவன உற்பத்தியில் சிறப்பாக செயல்பட்டதற்காக நிகழாண்டு தேசிய விருதுக்கு விருதுநகர் மாவட்டம் முதலிடத்தை பிடித்து தேர்வுசெய்யப்பட்டுள்ளது.

**கரோனாவுக்கு ஆயுஷ் சிகிச்சை முறை தொகுப்பு: NTI ஆயோக் வெளியீடு**

- கரோனா நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்தல் மற்றும் மேலாண்மையில் ஆயுஷ் அடிப்படையிலான சிகிச்சை முறையில் நாடு முழுக்க பல்வேறு மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் பின்பற்றப்பட்டு தீர்வு காணப்பட்ட கரோனா நோய்த் தொற்று மேலாண்மை: ஆயுஷ் சிகிச்சை முறை தொகுப்பை NITI ஆயோக் வெளியிட்டது.
- ஆயுர் வேதம், யோகா, மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி ஆகிய மருத்துவங்கள் ஒருங்கிணைத்திருப்பது ஆயுஷ் அடிப்படை சிகிச்சை.
- தமிழ் நாட்டில் COVID நோய்த் தொற்றுக் காலக் கட்டத்தில் வழங்கப்பட்ட கபசுர குடிநீர், நில வேம்பு குடிநீர் போன்றவை மூலம் நோய்த் தடுப்பு முறைகள் சிறப்பாக செயல்பட்டது பற்றி தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- சான்றுகள் அடிப்படையிலான ஆயுஷ் சேவைகளை நவீன முறையுடன் ஒருங்கிணைப்பது இந்தியாவின் சுகாதார அமைப்பை கணிசமாக வலுப்படுத்தும் எனவும் NITI ஆயோக் வெளியிட்ட இந்தத் தொகுப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**TNTecxperience தொடக்கம்:**

- மாநிலத்தில் நிதித் தொழில் நுட்பங்கள் பரவலாக பின்பற்றப்படுவதை அதிகரிக்கும் வகையில், டிஎன்டெக்ஸ்பீரியன்ஸ் (TNTecxperience) திட்டத்தை முதல்வர் தொடங்கி வைத்தார்.
- இத்திட்டம் மூலம் தனி நபர்கள் / புத்தொழில் நிறுவனங்கள் / குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், நிதித் தொழில் நுட்பங்களை பயன்படுத்துவதை மேலும் மேம்படுத்தும் வகையில், நிதி நுட்ப சேவைகளை இலவசமாகவோ அல்லது சில காலத்திற்கு குறைவான கட்டணத்திலோ பெறலாம்.

- மேலும், TNTecxperience திட்டத்திற்கான இணைய தளத்தையும் (https://tntecxperience. com) முதல்வர் தொடங்கி வைத்தார்.
- மேலும் இந்நிகழ்ச்சியில், தமிழ் நாடு நிதி தொழில் நுட்ப முதலீட்டுக் கள விழா - TN Pitch Fest - தமிழ் நாட்டில் உள்ள புத்தொழில்களுக்கு ஒரு தளத்தை உருவாக்கும் வகையிலும், தமிழ் நாட்டில் உள்ள புத்தொழில் சூழலை தொழில் மூல தன நிறுவனங்கள் மற்றும் புது முதலீட்டாளர்களுக்கு அறியப்படுத்தும் வகையில் ஒரு நிதி நுட்ப முதலீட்டுக் கள விழா (TN PtichFest), முதல்வரால் தொடங்கி வைக்கப்பட்டது.
- வழிகாட்டி நிறுவனமும், StartupTN நிறுவனமும் இணைந்து இத்திட்டத்தினை மேற்கொள்கின்றன.

**காரியாபட்டி அருகே சமணர் பள்ளி தடயங்கள் கண்டெடுப்பு:**

- காரியாபட்டி அருகே புல்லூர் கிராமத்தில் ஆயிராத்து நூறு ஆண்டுகளுக்கு முந்தைய சமணர் பள்ளி தடயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டம் புல்லூர் கிராமத்தில் பழைமையான இடிந்த கோவிலில் கல்வெட்டுகள் இருப்பதாக அக்கிராமத்தினர் தகவல் கொடுத்தனர்.
- அதன் படி, பாண்டிய நாடு பண்பாட்டு மையத்தைச் சேர்ந்த வரலாற்று ஆர்வலர் மதுரை அருண் சந்திரன் நேரில் சென்று ஆய்வு செய்தார்.
- இது குறித்து அவர் கூறியதாவது: இந்தக் கோவில் வளாகத்தில் ஆய்வு மேற்கொண்டதில் மொத்தம் ஒன்பது துண்டு கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இவை அனைத்திலும் வட்டெழுத்து மற்றும் கிரந்த எழுத்தால் எழுதப்பட்டுள்ளன.
- இதில் முற்கால பாண்டிய மன்னன் மாறன் சடையனின் நான்காம் ஆட்சியாண்டு கல்வெட்டும், இராஜ ராஜ சோழன் இக்கோவிலுக்குக் கொடுத்த நிவந்தம் பற்றிய கல்வெட்டும் காணப்படுகிறது.
- புல்லூரின் பழைய பெயர் திருப்புல்லூர் என்று கல்வெட்டின் மூலம் தெரிய வருகிறது. இது 1100 ஆண்டுகளுக்கு முந்தைய சமணர் பள்ளியின் தடயங்கள் ஆகும்.
- இது ஒரு சமணர் பள்ளியாக செயல்பட்டு வந்துள்ளது. இக்கோவிலின் பெயர் திருப்புல்லூர் பெரும் பள்ளி, உள்ளிருக்கும் இறைவன் அருகர் பட்டாளகர் என்பதை அறிய முடிகிறது.
- கோவிலில் நந்தா விளக்கு எரிக்க ஆடுகள் தானமாக வழங்கப்பட்டதும் இக்கல்வெட்டுகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

Adda247 தமிழ்

- பாண்டிய நாட்டில் சமண மதம் சிறப்பான நிலையில் இருந்ததற்கு இச்சமணப் பள்ளியே ஒரு சிறந்த உதாரணம். ஏற்கனவே, விருதுநகர் மாவட்டம் குரண்டியில் திருக்காட்டாம்பள்ளி என்ற சமணர் பள்ளி கண்டறியப்பட்டுள்ள நிலையில், தற்போது கண்டறியப்பட்டுள்ள இப்பள்ளி இரண்டாவது சமணப் பள்ளியாகும்.
- மேலும் குண்டாற்றின் மேல் கரையான மேல உப்பிலி குண்டு கிராமத்தில் தீர்த்தங்கரர் சிற்பம் கண்டறியப்பட்டுள்ளது.
- இங்குள்ள 9 துண்டு கல்வெட்டுகளையும் முறையாக படி எடுத்து ஆய்வு செய்ய தொல்லியல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

**மெட்ராஸ் ஐஐடி உருவாக்கிய 'ஹோமோசெப்' என்ற ரோபோவின் தனித்துவமான அம்சம்: கழிவு நீர் தொட்டிகளை சுத்தஞ் செய்வது**

- மனித ஈடுபாடு இல்லாமல் கழிவு நீர் தொட்டிகளைச் சுத்தஞ் செய்யும் ரோபோவை மெட்ராஸ் ஐஐடி ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- 'HomoSEP' எனப் பெயரிடப்பட்ட இதன் தயாரிப்பிற்கும் மேம்பாட்டிற்கும் GAIL (இந்தியா) உதவி புரிந்தது.
- முதற்கட்டமாக தமிழ் நாடு முழுமைக்கும் பத்து அலகுகள் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
- கையால் தூய்மைப்படுத்தும் முறையை ஒழிக்கும் நோக்கோடு இந்த ரோபோக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**அண்மைய MFN அறிக்கையின் படி, நிலுவையில் உள்ள சிறு நிதி கடன்களின் அடிப்படையில் முன்னிலையில் உள்ள மாநிலம் தமிழ் நாடு:**

- Microfinance Institutions Network (MFIN) வெளியிட்ட காலாண்டு அறிக்கையின் படி, தமிழ் நாடு மேற்கு வங்கத்தை இடமாற்றஞ் செய்து, சிறு நிதி கடன்கள் நிலுவையில் உள்ள மிகப் பெரிய மாநிலமாக உருவெடுத்துள்ளது.
- 2022 மார்ச் 31 நிலவரப் படி தமிழ் நாட்டின் மொத்தக் கடன் நிலுவை ₹36,806 கோடியாக இருந்தது;
- அதே சமயம் ஒட்டு மொத்த நுண் நிதித் துறையில் 2022 மார்ச் 31 நிலவரப் படி ₹2,85,441 கோடி கடன் நிலுவை உள்ளது.
- NBFC - MFI - களைத் தொடர்ந்து நுண் நிதிக் கடன்களை அதிகம் கொண்டவையாக வங்கிகள் உள்ளன.

**பிரிட்டிஷ் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட கவிதைகள், எழுத்துக்கள் மற்றும் வெளியீடுகளை அடையாளங் கண்டு வெளியிட்ட கலாச்சார அமைச்சகம்**:

- 75 வார கால 'அமுதப் பெருவிழா' கொண்டாட்டங்களை நடத்தும் அமைச்சக்கமாக கலாச்சார அமைச்சகம் உள்ளது.
- இது பிரிட்டிஷ் அரசாங்கம் தடைசெய்த கவிதைகள், எழுத்துக்கள் மற்றும் வெளியீடுகளை அடையாளங் கண்டு, அவற்றை தொகுத்து, இந்தியாவின் தேசிய ஆவணக் காப்பகத்தின் இணைய தளத்தில் வெளியிட்டுள்ளது.
- இந்தப் படைப்புகள் தமிழ், பெங்காலி, குஜராத்தி, ஹிந்தி, மராத்தி, கன்னடம், ஒடியா, பஞ்சாபி, சிந்தி, தெலுங்கு மற்றும் உருது உள்ளிட்ட ஒன்பது பிராந்திய மொழிகளில் உள்ளன.

**NABARD வங்கியின் 41 ஆவது நிறுவன நாள் கொண்டாட்டம்**:

- தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியான NABARD வங்கியின் 41 ஆவது நிறுவன நாள் சென்னையில் கொண்டாடப்பட்டது. தமிழ் நாட்டின் நிதியமைச்சர் Dr பழனி வேல் தியாகராஜன் இதில் கலந்து கொண்டார்.











வெற்றி வாராந்திர நடப்பு
நிகழ்வுகள் PDF தமிழில்
for TNPSC Group 1, TNPSC Group 2/2A,
TNPSC Group 4, TNUSRB, TNFUSRC,
IBPS, SSC, IBPS RRB, SBI, RRB, UPSC etc.


DAILY QUIZ
in Tamil
for TNPSC, UPSC, IBPS, RRB,
SSC, IBPS RRB, IB, BIS,SBI, ETC.


DAILY CURRENT
AFFAIRS IN TAMIL
for TNPSC Group 1, TNPSC Group 2/2A,
TNPSC Group 4, TNUSRB, TNFUSRC,
IBPS, SSC, IBPS RRB, SBI, RRB, UPSC etc.


BEST ARTICLES IN TAMIL
FOR EXAM PREPARATION
for TNPSC Group 1, TNPSC Group 2/2A,
TNPSC Group 4, TNUSRB, TNFUSRC,
IBPS, SSC, IBPS RRB, SBI, RRB etc.
ARTICLE


DOWNLOAD
Admit Card


ARTICLES
IN TAMIL